தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

மேட்டூர் அணை ஆகஸ்ட் 15-இல் திறப்பு: முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு

காவிரி டெல்டா விவசாயிகள் சம்பா நெல் சாகுபடி மேற்கொள்ள வரும் 15-ஆம் தேதி முதல் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். இதுகுறித்து, சட்டப்பேரவையில் விதி 110-ன் கீழ், முதல்வர் ஜெயலலிதா வியாழக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

காவிரி டெல்டா பாசனத்துக்காக, மேட்டூர் அணையில் இருந்து நீர் இருப்பைப் பொருத்து, ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்திலோ அல்லது அதற்குப் பின்னரோ தண்ணீர் திறந்து விடப்படும். இந்த ஆண்டு ஜூன் 12-ஆம் தேதி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 44.40 அடியாக இருந்ததாலும், தென் மேற்குப் பருவமழை குறைவு காரணமாக, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைவாக இருந்ததாலும், அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்காக ஜூன் 12-ஆம் தேதி தண்ணீர் திறந்துவிட இயலவில்லை. ஆகஸ்ட் 15-இல் திறப்பு: கர்நாடகம், கேரள மாநிலங்களில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில், இப்போது தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்து தொடர் மழை பெய்து வருகிறது. இதனால், கர்நாடகத்திலுள்ள முக்கிய அணைகளான ஹாரங்கி, ஹேமாவதி, கிருஷ்ணராஜசாகர், கபினி அணைகளில் இருந்து அதிக அளவில் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதனால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்து, புதன்கிழமை மாலை நிலவரப்படி 93.24 அடியாக, அதாவது 56.432 டி.எம்.சி. உயர்ந்துள்ளது. தொடர்ந்து மேட்டூர் அணைக்கு கணிசமான நீர் வந்து கொண்டிருக்கிறது. காவிரி நீர்பிடிப்புப் பகுதியில் தென் மேற்குப் பருவமழை மேலும் நன்றாக இருக்கும் என்பதை அறிந்தும், இப்போது மேட்டூர் அணையில் நீர் இருப்பைக் கருத்தில் கொண்டும், நிகழாண்டில் வடகிழக்குப் பருவமழை இயல்பானதாக இருக்கும் என்பதாலும், மேட்டூர் அணையில் இருந்து வரும் 15-ஆம் தேதி முதல் பாசனத்துக்காக தண்ணீர் திறந்துவிடப்படும். இதன் மூலம், சுமார்

12 லட்சம் ஏக்கர் பரப்பில் காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் தங்களது சம்பா நெல் சாகுபடியை மேற்கொள்ள வழி ஏற்படும். மேட்டூர் அணையைத் திறப்பதன் மூலம், அணைக்கு வரும் தண்ணீர் வீணாகாமல், காவிரி, வெண்ணாறு, கல்லணை கால்வாய் பாசனப் பகுதிகளில் உள்ள கிளை ஆறுகள், வாய்க்கால்கள் ஆகியவற்றுக்கு நீரைப் பகிர்ந்து அளிக்கவும், ஏரிகளில் நீரைச் சேமிக்கவும் வழி ஏற்படும் என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

**நீர்மட்டம் 95 அடியை எட்டியது**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை காலை 94.25 அடியாக உயர்ந்தது. கர்நாடக அணைகளில் இருந்து கூடுதலாக உபரி நீர் திறந்துவிடப்படுவதால், ஓரிரு நாள்களில் மேட்டூர் அணை நீர்மட்டம் 100 அடியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேட்டூர் அணைக்கு கடந்த 5-ஆம் தேதி நீர்வரத்து வினாடிக்கு 42,347 கன அடியாக இருந்தது. 6-ஆம் தேதி நீர்வரத்து 34,084 கன அடியாகக் குறைந்தது. இந்த நிலையில், வியாழக்கிழமை 22,210 கன அடியாக நீர்வரத்து குறைந்தது. வியாழக்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 94.25 அடியாக உயர்ந்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 800 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. நீர் இருப்பு 57.64 டி.எம்.சியாக இருந்தது. கர்நாடக மாநிலத்தின் கிருஷ்ணராஜ சாகர், கபினி அணைகளில் இருந்து நொடிக்கு 74,573 கன அடி உப ரி நீர் காவிரியில் புதன்கிழமை திறந்துவிடப்பட்டது. இந்தத் தண்ணீர் வெள்ளிக்கிழமை இரவு மேட்டூர் அணைக்கு வந்து சேரும் வாய்ப்புள்ளது. எனவே, அணையின் நீர்மட்டம் ஓரிரு நாள்களில் 100 அடியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒகேனக்கல் அருவிக்கு புதன்கிழமை நீர்வரத்து நொடிக்கு 20 ஆயிரம் கன அடியாக இருந்தது. இது வியாழக்கிழமை மாலை 35 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது.

**மரபுவழி சந்தன மரங்கள் ரூ.5 கோடியில் உற்பத்தி**

மரபுவழி சந்தன மரத் தோட்டங்களைச் சீரமைத்து மறு உற்பத்தி செய்ய ரூ.5 கோடி ஒதுக்கப்படும் என்று வனத் துறை அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் வியாழக்கிழமை நடைபெற்ற வனத்துறை மானியக் கோரிக்கையின் போது அமைச்சர் வெளியிட்ட அறிவிப்பு:

பொதுமக்களுக்குத் தேவையான தரமான மரங்களை வளர்த்து விநியோகிக்க, மாவட்ட வன விரிவாக்க மையங்களில் ரூ.4.8 கோடியில் 32 மத்திய நாற்றாங்கால்கள் அமைக்கப்படும். நிகழ் நிதியாண்டில் வேலூர், சேலம், ஈரோடு, தருமபுரி, திருச்சி மண்டலங்களில் மரபுவழி சந்தன மரத்தோட்டங்களை மீட்டெடுத்து, அப்பகுதியில் மறு உற்பத்தி செய்ய ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் வருவாயைப் பெருக்க, திருச்சியில் ரூ.11.35 கோடி செலவில் 4 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவுக்கு கூழ்மரத் தோட்டம் உருவாக்கப்படும். அதே பகுதியில் ரூ.2.52 கோடி செலவில் 1000 ஹெக்டேர் பரப்பளவுக்கு முந்திரித் தோட்டம் அமைக்கப்படும். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், தேயிலைப் பொருள்களின் தரத்தை உயர்த்தவும் நிதி உதவி வழங்கப்படும்.

## வறட்சிப் பகுதிகளில் விவசாயிகளுக்கு மானிய விலையில் டீசல், விதைகள்: மத்திய அரசு அறிவிப்பு

காரிப் பருவ சாகுபடியை பாதுகாக்கும் பொருட்டு, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் டீசல், விதைகள் வழங்கப்படும் என்று மத்திய அரசு வியாழக்கிழமை அறிவித்துள்ளது. இது தொடர்பாக மாநிலங்களவையில் மத்திய விவசாயத்துறை அமைச்சர் ராதா மோகன் சிங் கூறியதாவது:

இதுவரை எந்த மாநிலமும், வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப் படவில்லை. இருந்தபோதிலும், நாட்டின் பல்வேறு பகுதிகள் போதிய மழையில்லாமல் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனையடுத்து தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், 50 சதவீதம் அளவுக்கு மழையில்லாமல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு விவசாயப் பணிகளுக்கு மானிய விலையில் டீசல் வழங்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. நாட்டின் எந்தப் பகுதியில், மழையின் அளவு 50 சதவீதம் அளவுக்கு குறைந்துள்ளது என்பது குறித்து வானிலை மையங்களின் அறிக்கையைக் கொண்டு தெளிவாக அறிய முடியவில்லை. இருப்பினும், 520 மாவட்டங்களுக்கான அவசர கால திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருக்கும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் விதைகளுக்கான மானியத்தின் அளவு, 50

சதவீதமாக அதிகரிக்கப்படுகிறது. மேலும், வறட்சி பாதிக்கப்பட்ட பகுதியாக மாநில அரசுகளால் அறிவிக்கப்பட்டுள்ள இடங்களில் உள்ள விவசாயிகளுக்கு சிறப்பு உதவியாக ஹெக்டேருக்கு ரூ.35,000 வழங்கப்படும். தீவனப் பயிர் வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்படும் மாநிலங்களுக்கு கூடுதலாக ரூ.100 கோடி வழங்குவதற்கும் மத்திய அரசு முடிவு செய்துள்ளது என்று ராதா மோகன் சிங் தெரிவித்தார். கடந்த 2009, 2012ஆம் ஆண்டுகளில் வறட்சியால் நாட்டின் பல்வேறு பகுதிகள் பாதிக்கப்பட்டபோது, முந்தைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசும், அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் டீசல் வழங்கப்படும் என அறிவித்தது. அதேபோல், தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசும் தற்போது அறிவித்துள்ளது. இந்த மானியத்தை, மத்திய, மாநில அரசுகள் சரி சமமாக பகிர்ந்து கொள்ளும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இந்தியா செய்தது தவறு!

கடந்த வாரம் ஜெனீவாவில் நடந்த உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக நடைமுறை ஒப்பந்தம் கையெழுத்தாவதை இந்தியா தடுத்து நிறுத்தி இருக்கிறது. சர்வதேச வர்த்தகத்திற்கான கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதும், சுங்க வரிகளை எளிமைப்படுத்துவதும்தான், கடந்த ஜூலை மாதம் 31-ஆம் தேதிக்குள் கையெழுத்தாகி இருக்க வேண்டிய இந்த ஒப்பந்தத்தின் நோக்கம். நியாயமாகப் பார்த்தால், இந்த ஒப்பந்தம் இந்தியாவுக்கு மிகவும் நன்மை பயக்கக் கூடியது என்பதுதான் உண்மை. 1988-இல் ராஜீவ் காந்தி அரசு, உலக வர்த்தக அமைப்பின் விவசாயம் சார்ந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு ஆதரித்திருக்கிறது. அந்த ஒப்பந்தத்தின்படி, முறையான வர்த்தகத்தை மானியங்கள் பாதிக்கும் என்பதால், அவை அனுமதிக்கப்படவில்லை. மானியங்கள் பிரச்னையை கடந்த டிசம்பர் மாதம் பாலித்தீவில் கூடிய உலக வர்த்தக அமைப்பின் கூட்டத்தில் இந்தியா எழுப்பியது. அடுத்த நான்கு ஆண்டுகளில் மானியம் தொடர்பான பிரச்னைக்கு முடிவு காணப்படும் என்று அப்போது முடிவெடுக்கப்பட்டது. மானியப் பிரச்னையையும் வர்த்தக நடைமுறை ஒப்பந்தத்தையும் இணைத்துப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. உலக வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடாமல் இருப்பதை ஒத்துக்கொள்ளும் வேளையில், வர்த்தக நடைமுறை ஒப்பந்தத்தை மானியப் பிரச்னைக்காக இந்தியா தடுத்து நிறுத்துவது, உலகளாவிய அளவில் இந்தியாவுக்குக் கெட்ட பெயரைத்தான் ஏற்படுத்தும். கடந்த 19 ஆண்டுப்

பேச்சுவார்த்தைகள் ஒரு முடிவை எட்டியிருக்கும் வேளையில், வர்த்தக நடைமுறை ஒப்பந்தம் தடைபட்டிருப்பது, உலக வர்த்தக அமைப்பின் வருங்காலத்தையே கூடக் கேள்விக்குறியாக்கினால் ஆச்சரியப்படுவதற்கில்லை. வர்த்தக நடைமுறை ஒப்பந்தம் கையெழுத்தாகி நடைமுறைக்கு வந்தால், நிர்வாக ரீதியான பல தடைகள் அகற்றப்பட்டு, ஏற்றுமதி, இறக்குமதி சுலபமாகி இருக்கும். இந்த ஒப்பந்தத்தின் மூலம் உலகப் பொருளாதாரத்திற்கு சுமார் 50 லட்சம் கோடி ரூபாய் பற்று வரவு அதிகரித்திருக்கும் என்பது மட்டுமல்ல, இரண்டு கோடிக்கும் அதிகமான வேலைவாய்ப்புகள் உருவாகி இருக்கும். அதில் பெரும் பகுதி வளர்ச்சி அடையும் நாடுகளில்தான் ஏற்பட்டிருக்கும். ஆரம்பம் முதலே, நாடுகளுக்கு இடையேயான ஒப்பந்தங்கள் அகற்றப்பட்டு, சர்வதேச ஒப்பந்தங்கள் ஏற்பட வேண்டும் என்று இந்தியா குரல் கொடுத்து வந்திருக்கிறது. இதன்மூலம் அமெரிக்கா போன்ற வளர்ச்சி அடைந்த நாடுகள், தங்களுக்கு ஒரு சட்டம், ஏனைய நாடுகளுக்கு ஒரு சட்டம் என்கிற போக்கைக் கடைப்பிடிப்பது தடுக்கப்படும் என்பதுதான் இந்தியாவின் நிலைப்பாட்டுக்குக் காரணம். உலக வர்த்தக அமைப்பு மானியங்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. அரிசி, கோதுமை போன்றவை அரசால், அரசு நிறுவனங்களால் வாங்கப்பட்டு, மானிய விலையில் விநியோகிக்கப்படும்போது, அந்த மானிய தானியங்கள் ரேஷன் கடைகளிலிருந்து வெளிச்சந்தைக்கும், ஏற்றுமதிக்கும் திருட்டுத்தனமாக எடுத்துச் செல்லப்படுகிறது. இது சர்வதேச வர்த்தகத்தைப் பாதித்து, உலகச் சந்தையில் தவறான போட்டிக்கு வழிகோலுகிறது.

வர்த்தக நடைமுறை ஒப்பந்தத்தில் மானியப் பிரச்னையைக் காரணம் காட்டி இந்தியா கையெழுத்திடாமல் போனது, இந்தியாவின் அநாகரிகமான அச்சுறுத்தல் என்று குற்றம்சாட்டப்படுகிறது. மானியங்கள் வழங்குவதிலும், முறையான உணவுப் பொருள் விநியோகம் இல்லாமல் இருப்பதிலும் பல குளறுபடிகளை வைத்துக்கொண்டு, இந்தியா வர்த்தக நடைமுறை ஒப்பந்தத்தை நிறுத்தி வைத்ததுதான், பல நாடுகளுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. உணவு உற்பத்தியில் 10 விழுக்காட்டிற்கு மேல் எந்தவொரு நாடும் சேமிப்பு என்கிற பெயரில் உணவு தானியங்களைச் சேர்த்து வைக்கக்கூடாது என்கிற உலக வர்த்தக அமைப்பின் கூற்றில் நியாயம் இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. உணவுக் கிடங்குகளில் தேங்கி வீணாவதற்கும், பெருச்சாளிகள் தின்று

அழிப்பதற்கும், மழையில் நாசமாவதற்கும் இந்தியா உணவு தானியங்களைச் சேர்த்து வைக்கிறது என்றால், அமெரிக்கா போன்ற நாடுகள் உணவு தானியங்களைப் பதுக்கி வைத்து உலகச் சந்தையில் செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விலையை அதிகரிக்கச் செய்கின்றன. அதைத் தடுப்பதற்கான வழிமுறையை, நமது உணவுப் பாதுகாப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று கூறித் தடுத்து நிறுத்தி இருக்கிறோம். மானியப் பிரச்னையைத் தீர்த்துக் கொள்ள நான்கு ஆண்டு அவகாசம் இருக்கும்போது, வர்த்தக நடைமுறை ஒப்பந்தத்தைத் தடுத்து நிறுத்தியது தவறு. இந்தியாவின் அணுகுமுறை சரியல்ல!

**<u>மேலூர் பகுதியில் மானிய விலையில் கால்நடைகளுக்கு தீவனம்</u>**

மேலூர் வட்டாரத்தில் வெள்ளலூர், கருங்காலக்குடியில் மானிய விலையில் கால்நடைகளுக்கு தீவனம் விநியோகிக்கும் திட்டம் துவங்கப்பட்டது. கால்நடை களுக்கு மானிய விலையில் வைக்கோல் வழங்கும் திட்டத்தை தமிழக முதல்வர் அறிவித்திருந்தார். இதன்கீழ் வெள்ளலூரில் கால்நடை வளர்ப்போருக்கு வைக்கோல் கட்டுகள் விநியோகத்தை துவக்கிவைத்து கால்நடை உதவி இயக்குநர் ராஜதிலகன் கூறியது:

மதுரை மாவட்டத்தில்  உசிலம்பட்டி, திருமங்கலம், வாடிப்பட்டி, வெள்ளலூர் கருங்காலக்குடி ஆகிய இடங்களில் கால்நடை தீவனத்துக்கு மானியமாக அரசு தலா ரூ.10 லட்சம் வழங்கியது. இதில் வெளியூர்களில் கிலோ ரூ.9.50 விலைக்கு வாங்கி விவசாயிகளுக்கு கிலோ ரூ.2 விலையில் விற்பனை செய்யபபடுகிறது. முன்னதாக கால்நடை வளர்ப்போர் விவரங்கள் ஆய்வு செய்யப்பட்டு, புகைப் படத்துடன் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி தற்போது வெள்ளலூரில் 45 டன் வைக்கோல் விநியோகிக்கப்பட்டுள்ளது. மேலும் 75 டன் விற்பனைக்கு உள்ளது. கருங்காலக்குடியில் 45 டன் விநியோகிக்கப்பட்டுள்ளது. இன்னும் 80 டன் விநியோகிக்கப்படவுள்ளது. ஒரு கால்நடைக்கு தலா 3 கிலோ வீதம் அதிகபட்சம் 105 கிலோ வழங்கப்படுகிறது. இருப்பு உள்ளவரை தொடர்ந்து விநியோகம் நடைபெறும் என்றார்.

விவசாயிகள் வலியுறுத்தல்:

மாவட்டத்தின் பிற பகுதிகளில் நிதிஒதுக்கீடு முடிந்துவிட்டதால் திட்டத்தை நிறுத்திவிட்டனர். கடந்த இரு ஆண்டாக வறட்சியால் குடிநீர் கிடைக்கவில்லை. மழையின்றி புல்பூண்டுகள் கருகிவிட்டன. இதனால் கால்நடைகளுக்கு மேய்ச்சல்

இல்லை. மானியவிலையில் வைக்கோல் விற்பனையை மழைக்காலம் தொடங்கும்வரை கூடுதல் நிதி ஒதுக்கித் தொடரவேண்டும் என கால்நடை வளர்ப்போர் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## <u>சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்ப் செட்டுடன் நுண்ணீர் பாசன வசதிக்கு 80 சதவீதம் மானியம்: ஆட்சியர்</u>

சூரிய சக்தியால் இயங்கும் பம்ப் செட்டுடன் நுண்ணீர் பாசன வசதி ஏற்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு 80 சதவீதம் வரையில் மானியம் வழங்கப்பட்டு வருவதாக ஆட்சியர் டி.என். ஹரிஹரன் தெரிவித்தார். விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் சூரிய சக்தியால் பம்ப் செட்டுகளுடன் நுண்ணீர் பாசன வசதி ஏற்படுத்துவது தொடர்பாக விவசாயிகளுக்கான விழிப்புணர்வுக் கூட்டம் புதன்கிழமை மாலையில் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு ஆட்சியர் டி.என். ஹரிஹரன் தலைமை வகித்து பேசியதாவது: அரசு விவசாய உற்பத்தியை பெருக்குவதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மின்சார தேவையை கருத்தில் கொண்டு சூரிய சக்தியால் இயங்கும் பம்ப் செட்கள் மூலம் நுண்ணீர் பாசன வசதியை ஏற்படுத்தும் திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. விருதுநகர் மாவட்டத்தில் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள விவசாயிகளுக்கு மேற்குறிப்பிட்ட திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்காக தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மூலம் 50 சதவீத மானியமும், தமிழக அரசின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் மூலம் 30 சதவீத மானியமும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இதில் விவசாயிகளின் பங்களிப்பு தொகையாக 20 சதவீதம் செலுத்த வேண்டும். மேலும், ஆழ்குழாய் கிணறு, திறந்த வெளிக்கிணறு, தரை மட்ட நீர்த் தேக்கத் தொட்டி போன்றவைகளுக்கு சூரிய சக்தியால் இயங்கும் பம்ப் செட்டுகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. அதே போல், நுண்ணீர் பாசனம் அமைப்பதற்கு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்தையும், பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தையும் அரசு வழங்குகிறது. இதில், சூரிய சக்தியால் இயங்கும் பம்ப் செட்டுகளுடன் நுண்ணீர் பாசன வசதி ஏற்படுத்துதல் திட்டத்தின் மூலம் திறந்த வெளிக் கிணற்றில் நீர்மூழ்கி பம்ப்செட் அமைக்க ரூ.5.01 லட்சம் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதில் விவசாயிகளின் பங்களிப்பாக ரூ.1.15 லட்சமும், மானியம் ரூ.3.84 லட்சம் வரையில் மானியமாகவும் வழங்கப்படுகிறது. இதனால் மின்சாரத்தை எதிர்பார்த்து இல்லாமலும், பிற எரிபொருள் செலவின்றியும் இயற்கையாக கிடைக்கும் சூரிய சக்தியினை

பயன்படுத்தி விவசாய நீர்பாசனத் திட்டத்துக்கு இத்திட்டம் உதவுகிறது. எனவே இத்திட்டம் குறித்து விவசாயிகள் அனைவரும் அறிந்து கொண்டு பம்ப் செட்டுகளுடன் நுண்ணீர் பாசன வசதியை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று ஆட்சியர் தெரிவித்தார். பின்னர் வேளாண்மை இயந்திர மயமாக்கல் விளக்கக் கையேட்டினை ஆட்சியர் வெளியிட, அதை விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் விஜயமுருகன் பெற்றுக் கொண்டார். மேலும், இத்திட்டம் பற்றியும், நுண்ணீர் பாசன அமைப்பு பற்றியும் தனியார் நிறுவனம் மூலம் விரிவாக எடுத்துரைக்கப் பட்டது. இந்தக் கூட்டத்தில் வேளாண்மைத்துறை இணை இயக்குநர் சுப்பையா, செயற்பொறியாளர் ஆறுமுகநயினார், வேளாண்மை துணை இயக்குநர் செண்பகராஜ், வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் குரூஸ் மோகனசுந்தர், உதவி பொறியாளர் சாந்தி சகாயசீலி மற்றும் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் தொழில் நுட்ப ஆலோசகர்கள் சரவணன் உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**<u>வேளாண் பொருள்களுக்கு வரி விலக்குத் தொடர வலியுறுத்தல்</u>**

வேளாண் பொருள்களுக்கு வரி விலக்கு தொடர வேண்டும் என்று ஈரோடு மாவட்ட அனைத்து தொழில்வணிக சங்கங்களின் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து, மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லிக்கு, இக்கூட்டமைப்பின் தலைவர் என்.சிவநேசன், பொதுச்செயலாளர் வி.கே.ராஜமாணிக்கம் ஆகியோர் புதன்கிழமை அனுப்பிய மனு விவரம்:

தற்போது சமர்ப்பித்த நிதிநிலையில் ஜி.எஸ்.டி. எனப்படும் பொருள் மற்றும் சேவை வரிச் சட்டம் வரும் நிதியாண்டு (1.4.2015) முதல் அமல்படுத்தப்படும் என்று தெரியவந்துள்ளது. இச்சட்டத்தை அனைத்து மாநிலங்களிலும் அமல்படுத்த வேண்டுமென்றால் சில எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும். மத்திய சரக்குகள் மற்றும் சேவை வரி ஒரு பிரிவாகவும், மாநில சரக்குகள் மற்றும் சேவை வரி மாநிலங்களுக்கு இடையில் ஒரு பிரிவாகவும் செயல்படவேண்டும். இதற்கான முழுமையான வரைவு அறிக்கையை மத்திய அரசு விரைவில் வெளியிட வேண்டும்.

அனைத்து தொழில் சார்ந்த வர்த்தக அமைப்புகளுடன் நாடு தழுவிய விவாதம் நடத்தி அதன் முடிவைப் பெறவேண்டும். விலக்கு அளிக்கப்படும் பொருள்களின் பட்டியல் அகில இந்திய அளவில் ஒரே மாதிரி இருக்க வேண்டும். மத்திய, மாநில ஜி.எஸ்.டி. வரி விகிதம் எக்காரணம் கொண்டும் தற்போது உள்ள 12.5 சதவீதத்தைவிட அதிகமாக இருக்க கூடாது. தற்போது நடைமுறையில் உள்ள

வாட் வரிவிலக்கான ரூ.10 லட்சம் மற்றும் சேவை வரி விலக்கான ரூ.10 லட்சம் என்பது சிறு, குறு வணிகர்கள் நலன் கருதி தொடரவேண்டும். ரூ. 50 லட்சம் வரை வணிகம் செய்யும் சிறு வணிகர்கள் தற்போது உள்ள நடைமுறைப்படி 0.5 சதவீதம் மட்டும் செலுத்தி வணிகம் செய்திட அனுமதிக்கவேண்டும். வரிவசூல் முறை அகில இந்திய அளவில் ஒரே மாதிரி அமையவேண்டும். மாநில எல்லையில் உள்ள சோதனைச் சாவடி தவிர இதர சாவடிகள் அனைத்தையும் நீக்க வேண்டும். சிறப்பு பொருளாதார மண்டலங்கள், வேளாண் விளை பொருள்கள் மீதான வரி விலக்கு தொடரவேண்டும். மத்திய, மாநில அரசுகள் எந்த ஒரு பொருளுக்கும் தன்னிச்சையாக வரி விலக்கு செய்வது தடுக்கப்படவேண்டும். மதுபானப் பொருள்கள், சிகரெட், புகையிலை, போதை பாக்குகள், பான்மசாலாக்கள் மீது உள்ள அதிகபட்ச வரி விதிப்பு தொடர வேண்டும். மாநிலங்களில் தற்சமயம் உள்ள வரி வருவாய் குறையாமல் இருக்க மத்திய அரசு உதவவேண்டும். அலுவலர்கள், வணிகர்கள், தொழில்முனைவோர்களுக்கு பயிற்சி வழங்க வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>குடுமியான்மலையில் அரசு வேளாண் கல்லூரி: பொதுமக்கள் வரவேற்பு</u>**

புதுகை மாவட்ட மக்களின் நெடுநாளைய கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், குடுமியான்மலையில் அரசு வேளாண் கல்லூரி தொடங்கப்படும் என வியாழக்கிழமை சட்டப்பேரவையில் முதல்வர் அறிவித்ததற்கு பொதுமக்கள் தங்களது மகிழ்ச்சியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர். புதுக்கோட்டை அருகே 10 கிமீ தொலைவில் உள்ள குடுமியான்மலையில் சுமார் 2,500 ஏக்கர் வனப்பகுதியில் கடந்த 1967-ல் 1017 ஏக்கர் கரடுமுரடான காடுகளை அழித்து, அதில் மாநில வேளாண் மேலாண்மை பயிற்சி நிலையம், தோட்டக்கலை, உழவர் பயிற்சி நிலையம் ஆகியவை அமைக்கப்பட்டன. இதில் மீதமுள்ள 645 ஏக்கரில் பல்வேறு அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் கடந்த 1971-ல் அரசு அண்ணா பண்ணை திறக்கப்பட்டது. தற்போது அங்கு அரசு வேளாண் கல்லூரி அமைக்கப்படும் என முதல்வர் அறிவித்துள்ளது புதுக்கோட்டை மாவட்ட மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதையடுத்து, முதல்வரின் அறிவிப்பை வரவேற்று அனைத்து தரப்பினரும் நன்றி தெரிவித்துள்ளனர். இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் மு. மாதவன் கூறியது: ஏறத்தாழ 43 ஆண்டுகளுக்குப் பிறகு குடுமியான்மலையில் அரசு வேளாண் கல்லூரி நிறுவப்படுமென அறிவித்ததன் மூலம் அனைவரின்

எதிர்பார்ப்பையும் தமிழக முதல்வர் ஜெயலலிதா நிறைவேற்றியுள்ளார். அவருக்கு மாவட்ட விவசாயிகள் சார்பில் மகிழ்ச்சியுடன் பாராட்டுக்களைத் தெரிவிக்கிறோம்.

இந்திய விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் ஜி.எஸ். தனபதி கூறியது:

பல ஆண்டுகளாக மாவட்ட விவசாயிகள் வலியுறுத்தி வந்த கோரிக்கை தற்போது நிறைவேறியுள்ளது மகிழ்ச்சியைத் தருகிறது. இங்கு தொடங்கப்படும் வேளாண் கல்லூரியில் மாவட்ட விவசாயிகளின் வாரிசுகள் படிப்பதற்கு உதவியாக சில இடங்களை சிறப்பு ஒதுக்கீடு மூலம் அளிக்க முன்வர வேண்டும்.

கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் சி. அப்பாவுபாலாண்டார் கூறியது: கடந்த திமுக ஆட்சியால் செய்ய முடியாத பல திட்டங்களை புதுக்கோட்டை மாவட்டத்துக்கு முதல்வர் அறிவித்து வருவது வரவேற்புக்கு உரியது. அத்துடன், மாவட்ட மக்களிடம் பெருங்குறையாக நீடித்து வரும் அரசு மருத்துவக் கல்லூரி அல்லது மத்திய அரசின் எய்ம்ஸ் மருத்துவமனையை புதுக்கோட்டையில் அமைக்க  நடவடிக்கை எடுத்தால் நல்லது.

## "ஒருங்கிணைந்த விவசாயி கையேடு பெற விண்ணப்பிக்கலாம்'

திருநெல்வேலி மாவட்டத்தில் வேளாண்மைத் துறையின் ஒருங்கிணைந்த விவசாயி கையேடு பெற விரும்பும் விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக திருநெல்வேலி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் செ. சந்திரசேகரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

திருநெல்வேலி மாவட்டத்தில் மொத்தம் 50 வேளாண் விரிவாக்க மையங்கள் உள்ளன. இவற்றில் 19 முதன்மை விரிவாக்க மையங்களும், 31 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களும் அடங்கும். அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கும், தலா ஒன்று வீதம் 50 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில், முதல்கட்டமாக 19 முதன்மை வேளாண்மை விரிவாக்க மையங்களில் இணையதள வசதிகள் செய்யப்பட்டு, விவசாயிகள் வாங்கும் இடுபொருள்களுக்கு இணையதளம் மூலம் பட்டியல்கள் வழங்கப்படுகின்றன. ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு வைத்துள்ள விவசாயிகளே இடுபொருள்கள் பெற முடியும். இந்தக் கையேட்டில் ஒவ்வொரு விவசாயிக்கும் தனி குறியீட்டு எண் வழங்கப்பட்டுள்ளது. இந்த எண்ணைப் பயன்படுத்திதான் விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையத்தில் பட்டியலிட முடியும். இதுவரை திருநெல்வேலி மாவட்டத்தில் 2 லட்சத்து 77 ஆயிரத்து 927 பண்ணைக் குடும்பங்களுக்கு ஒருங்கிணைந்த விவசாயி கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை கையேடு பெறாதவர்கள் அதனை பெறுவதற்கு

விண்ணப்பிக்கும் வகையில், தங்களது வயலில் மண் மாதிரிகள் எடுத்து ரூ. 20 ஆய்வுக் கட்டணம் செலுத்தி, தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்கள் மூலம் மண் பரிசோதனை நிலையத்துக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

அவ்வாறு அனுப்பும்போது, ஒவ்வொரு பண்ணைக் குடும்பத்துக்கும் ஒரு குறியீட்டு எண் வழங்கப்பட்டு அனுப்பப்படும். ஆய்வின் முடிவுகள் இணையதளத்திலும், விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட குறியீட்டு எண்ணில் பதிவேற்றம் செய்யப்படும். பின்னர் ஒவ்வொரு பண்ணைக் குடும்பத்துக்கும் குறியீட்டு எண்ணுடன் கூடிய ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு வழங்கப்படும். இந்தக் கையேட்டில் அவர்களது மண் மாதிரி முடிவுகள், பரிந்துரைகள் எழுதப்பட்டிருக்கும். இந்தக் கையேட்டில் உள்ள குறியீட்டு எண்களைப் பயன்படுத்தி வேளாண்மை விரிவாக்க மையங்களில் இடுபொருள்கள் பெற்றிடலாம். எனவே, இந்தக் கையேடு பெறாத விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களை அனுகி மேலும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## <u>கொள்ளிடம் ஆற்றில் கதவணை: விவசாயிகள் கொண்டாட்டம்</u>

சிதம்பரம் கொள்ளிடம் ஆற்றில் ரூ.400 கோடி செலவில் கதவணை அமைக்க அறிவிப்பு வெளியிட்ட முதல்வருக்கு நன்றி தெரிவித்து, காட்டுமன்னார்கோவிலில் கொள்ளிடம் கீழணை பாசன விவசாயிகள் சங்கத்தினர் பட்டாசு வெடித்துக் கொண்டாடினர். பின்னர், காட்டுமன்னார்கோவில் தனியார் மண்டபத்தில் முதல்வருக்கு நன்றி தெரிவித்து ஆலோசனைக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு விவசாயிகள் சங்கத் தலைவர் பி.விநாயகமூர்த்தி தலைமை வகித்தார். நிர்வாகிகள் எம்.அன்பழகன், பி.லட்சுமிகாந்தன், எஸ்.கவிச்செல்வன், ஆர்.கலியமூர்த்தி, ஆர்.மணிவண்ணன், எம்.பாரதி உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். கோரிக்கையை ஏற்று கொள்ளிடம் ஆற்றில் கதவணை கட்ட அறிவிப்பு வெளியிட்ட முதல்வருக்கு நன்றி தெரிவிப்பது, வடவாறு, வீராணம் ஏரி பாசனத்துக்கும், சென்னை குடிநீர் ஆதாரத்தை பாதுகாக்கவும் கீழணைக்கு மேலே மழைநீரை தேக்க அரியலூர் மாவட்டம், கோடாலி கருப்பூர் அருகே புதிய கதவணை கட்ட கள ஆய்வு செய்திட வேண்டும். கடலூர், நாகை மாவட்ட கரையோர மக்கள் நலன் கருதியும், கடலூர்

மாவட்டம், வல்லம்படுகையில் கொள்ளிடம் ஆற்றில் படுக்கை அணை கட்ட விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். சம்பா பருவத்துக்குத் தேவையான நெல் விதைகளை மானிய விலையில் வழங்க வேண்டும். தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து செப்டம்பர் 17-ல் காட்டுமன்னார்கோவில்-கடலூர் வரை மோட்டார் சைக்கிள் பேரணி நடத்துவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## "75 லட்சம் ஏக்கரில் நீர்ப்பாசனத் திட்டம்'

கர்நாடகம் முழுவதும் 75 லட்சம் ஏக்கரில் நீர்ப்பாசனத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று, அந்த மாநில நீர்வளத் துறை முதன்மைச் செயலாளர் கபில்மோகன் தெரிவித்தார். மைசூரில் புதன்கிழமை நடைபெற்ற நில கையகப்படுத்தலில் ஒளிவுமறைவின்மை, மறு குடியமர்வு, மறுவாழ்வு, நியாயமான இழப்பீடு உரிமைச் சட்டம் 2013 தொடர்பான பயிலரங்கைத் தொடக்கிவைத்து அவர் பேசியது:

வட கர்நாடக மாவட்டங்களில் விவசாயத்திற்குப் போதிய நீர்ப்பாசன வசதியில்லை. மாநிலத்தில் 75 லட்சம் ஏக்கர் நிலத்தை நீர்ப்பாசன வரம்புக்குள் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் 2 லட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசனம் வழங்கப்படும். இந்தத் திட்டத்திற்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. திட்டத்தை உரியகாலத்தில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். நிலம் கையகப்படுத்துதல், சுற்றுச்சூழல் பிரச்னைகளால்தான் பெரும்பாலானத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுகிறது. மத்திய அரசு கொண்டு வந்துள்ள நிலம் கையகப்படுத்தலில் ஒளிவுமறைவின்மை, மறுகுடியமர்வு, மறுவாழ்வு, நியாயமான இழப்பீடு உரிமைச் சட்டம் 2013, கடந்த ஜனவரி 1-ஆம் தேதி முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், திட்டங்களைச் செயல்படுத்துவதற்கானத் தடைகளை அகற்ற முடியும். காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையத்திற்கு நிலம் கையகப்படுத்தியதில் ஏராளமான சட்டச் சிக்கல்கள் உள்ளதால் திட்டங்களைச் செயல்படுத்த தாமதம் ஏற்பட்டது. இதனால் அரசுக்கு நிதிச் சுமை ஏற்படுகிறது என்றார் அவர்.

## வறட்சி: விவசாயிகளுக்கு மீண்டும் பயிர்க் கடன்

கர்நாடகத்தில் வறட்சியால் பாதித்த விவசாயிகள் மீண்டும் வங்கிகளில் பயிர்க் கடன் வாங்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த மாநில சட்டத் துறை அமைச்சர் டி.பி.ஜெயசந்திரா தெரிவித்தார். பெங்களூரு விதான செப்தாவில் புதன்கிழமை மாநில வங்கியாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

கர்நாடகத்தில் ஒரு சில மாவட்டங்களில் கடும் வறட்சி ஏற்பட்டதால், வங்கிகளில் பெற்ற பயிர்க் கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில், அந்தக் கடனை உடனடியாக திருப்பிச் செலுத்துமாறு விவசாயிகளை வற்புறுத்த வேண்டாம் என்று, வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், வறட்சியால் பாதித்த ஏற்கெனவே பயிர்க் கடன் பெற்ற விசாயிகள் மீண்டும் வங்கிகளில் பயிர்க் கடன் வழங்குமாறு மாநில அரசு விடுத்த வேண்டுகோளை ஏற்று, விவசாயிகளுக்கு பயிர்க் கடனை மீண்டும் வழங்க ரிசர்வ் வங்கி ஒப்புதல் தெரிவித்துள்ளது. எனவே, விவசாயிகள் வங்கிகளில் தாராளமாக பயிர்க் கடனை பெற்றுக் கொள்ளலாம் என்றார் அவர்.

## திரவ உரங்கள் மானிய விலையில் வழங்கப்படுமா?

கே. அசோக்குமார் (கிருஷ்ணகிரி): கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வெட்டு ரோஜா, இளஞ்சிவப்பு மலர், கர்பெரா போன்ற மலர் வகைகளும், மிளகாய், ஐரோப்பா வெள்ளரி போன்ற உயர் மதிப்புமிக்க காய்கறி வகைகளும் சுமார் 3 ஆயிரம் சிறு விவசாயிகள் மூலம் பாலி பசுமை இல்லங்களில் சாகுபடி செய்யப்படுகின்றன. சுமார் ஒரு லட்சம் கிலோ வரை உற்பத்தியாகும் இந்த வகை தோட்டக்கலைப் விளைபொருள்களில் வெறும் 500 கிலோ மட்டுமே தில்லி உள்ளிட்ட பிற பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றன. ரயில், விமானக் கட்டணம் அதிகம் இருப்பதே இதற்குக் காரணம். எனவே, இவற்றை உள்நாட்டு வேறு நகரங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்பும் வகையில் கட்டண மானியமும், சாகுபடிக்கு மானிய விலையில் திரவ உரங்களும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பழுதான ரயில் பெட்டிகளை மாற்ற வேண்டும் பி. வேணுகோபால் (திருவள்ளூர்): மக்களவையில் வியாழக்கிழமை பூஜ்ய நேரத்தில் திருவள்ளூர் மக்களவைத்

தொகுதி அதிமுக உறுப்பினர் டாக்டர் பி. வேணுகோபால் பேசியதாவது: ரயில்களில் இணைக்கப்பட்டுள்ள பெரும்பாலான பெட்டிகள் மோசமான நிலையில் இருப்பது கவலையளிப்பதாக உள்ளது. துரந்தோ உள்ளிட்ட ரயில்களின் பெட்டிகள் பழையவையாகவே உள்ளன. தெற்கு ரயில்வேயால் இயக்கப்படும் ரயில்கள் பலவற்றில் 15 முதல் 20 ஆண்டுகளுக்கு மேலாகப் பயன்பாட்டில் உள்ள பெட்டிகளே இணைக்கப்பட்டுள்ளன. எனவே, அவற்றை நீக்கிவிட்டு புதிய பெட்டிகளை இணைக்கும் அவசரத் தேவை இப்போது ஏற்பட்டுள்ளது. பயணிகளுக்கு சிறந்த வசதிகளை அளித்து வருவதாக தன்னை பெருமையுடன் கூறிவரும் ரயில்வே அமைச்சகம், இந்த விஷயத்திலும் உரிய நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.ஆடுதுறையில் மத்திய வேளாண் பல்கலை. அமைக்க வேண்டும் ஆர்.கே. பாரதிமோகன் (மயிலாடுதுறை): தமிழக காவிரி டெல்டா பகுதியில் முப்பருவமும் சுமார் பன்னிரெண்டரை லட்சம் ஏக்கரில் நெல், 1.50 லட்சம் ஏக்கரில் தானிய வித்துக்கள், கரும்பு, பருத்தி, தென்னை, வாழை, காய்கறிகள் ஆகியவை சாகுபடி செய்யப்படுகின்றன. காவிரி டெல்டா பகுதியான மயிலாடுதுறை மக்களவைத் தொகுதிக்குள்பட்ட ஆடுதுறை பேரூராட்சியில் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், மத்திய அரசின் இந்திய விவசாய ஆராய்ச்சி நிலையம் ஆகியவை அமைந்துள்ளன. முனைவர் படிப்பு வரை பயிலும் மாணவர்கள் இங்கு மண், நீர், பௌதீக அமைப்பு மற்றும் நெல் சார்ந்த பயிர் வகைகளை ஆராய்ச்சி செய்து வருகின்றனர். எனவே, இந்தப் பகுதியில் மத்திய வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டால் தமிழ்நாட்டுக்கும், விவசாயிகளுக்கும் பெரும் உதவியாக இருக்கும். எச்.பி.எஃப். ஊழியர்களின் சம்பள பிரச்னை தீருமா? கே.ஆர். அர்ஜுனன் (அதிமுக): தமிழகத்தின் நீலகிரியில் உள்ள அரசுப் பொதுத் துறை நிறுவனமான ஹிந்துஸ்தான் ஃபோட்டோ ஃபிலிம்ஸ் தொழிற்சாலை ஊழியர்கள் வழக்கமான சம்பளம் கிடைக்காமல் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மற்ற பொதுத் துறை நிறுவனங்களின் ஊழியர்களுக்கு இணையாக, வழக்கமான பணியைச் செய்ய உருவாக்கப்பட்டுள்ள போதிலும், 1987-ஆம் ஆண்டுக்கான சம்பள விகிதம் அவர்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. சில மாதங்களாக குறைந்தபட்ச சம்பளம்கூட தரப்படவில்லை. எனவே, நலிவடைந்த நிறுவனமாக ஹிந்துஸ்தான் ஃபோட்டோ ஃபிலிம்ஸ் தொழிற்சாலை அறிவிக்கப்பட காரணம் என்ன? ஏன் அதை புனரமைக்க முடிவு செய்யவில்லை என்பதை மத்திய அரசு விளக்க வேண்டும்.யூரியா தயாரிப்பு நிறுவனங்களுக்கு மானியம் தொடருமா? ஆர். லட்சுமணன் (அதிமுக):

தமிழகத்தில் மணலியில் மெட்ராஸ் ஃபெர்டிலைசர்ஸ் லிமிடெட் பொதுத் துறை நிறுவனமும், மற்றொரு தனியார் நிறுவனமும் யூரியா உரம் தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்றன. இதற்கு நாப்தா மூலப்பொருளாக இருந்து வருகிறது. இவற்றுக்கு வழங்கப்பட்டு வரும் மானியத்தை நிறுத்துவது என மத்திய அரசு எடுத்துள்ள முடிவு நியாயமற்றது. இதனால், விவசாயிகள் பாதிக்கப்படுவர். எனவே, இரு நிறுவனங்களுக்கும் தொடர்ந்து மானியம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளின் நலனுக்கு முக்கியத்துவம் தர வேண்டும் கே.பி. ராமலிங்கம் (திமுக): உலக வர்த்தக நிறுவனம் (டபிள்யுடிஓ) மீதான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து வர்த்தக துறை இணை அமைச்சர் நிர்மலா சீதாராமன் விளக்கமாக ஓர் அறிக்கை தந்துள்ளது பாராட்டும் வகையில் உள்ளது. எனினும், அதனுடன் இந்தியா மேற்கொள்ளும் எந்த ஒப்பந்தமாக இருந்தாலும். அது நமது விவசாயிகளின் நலனைப் பாதிக்காத வகையில் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். இந்த விவகாரத்தில் எந்தவித சமரசத்திற்கும் இடம் தரலாகாது. மேலும், ஏற்றுமதி விவகாரத்தில் மிகவும் கவனமாக இருப்பது மட்டுமில்லாமல், மதிப்புக்கூட்டடப்பட்ட விவசாயப் பொருள்களின் இறக்குமதியிலும் நாம் கவனமாக இருக்க வேண்டும். மும்பை - நாகர்கோவில் ரயில் தினசரி இயக்கப்படுமா? வி.மைத்ரேயன் (அதிமுக): மும்பை- நாகர்கோவில் எக்ஸ்பிரஸ் ரயில் அதிவிரைவு ரயிலாக மாற்றப்பட்டு, தினசரி இயக்கப்பட வேண்டும் என்பது நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. இந்த ரயில் மும்பையில் பகலில் புறப்படுவதற்குப் பதிலாக காலையில் புறப்பட வேண்டும். அப்போதுதான் அடுத்த நாள் மாலையில் திருநெல்வேலியைச் சென்றடையும். இதன்மூலம் அருகில் உள்ள பகுதிகளுக்குப் பயணிகள் செல்வதற்குரிய போக்குவரத்து வசதி போதுமானதாக அளவில் கிடைக்கும். எனவே, மும்பை - நாகர்கோவில் ரயிலை அதிவிரைவு ரயிலாக மாற்றுவதுடன், காலை நேரத்தில் புறப்படும் வகையிலும், தினசரி ரயிலாகவும் இயக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>நாமக்கல் என்.சி.எம்.எஸ்., யில் ரூ. 17 லட்சத்துக்கு பருத்தி ஏலம்</u>**

நாமக்கல்: நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, 17 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 950 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். சுரபி ரகம் அதிக பட்சமாக, 7,340, குறைந்த பட்சமாக, 6,950 ரூபாய். ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 5,219, குறைந்த பட்சமாக, 4,856 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக 17 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, ஆகிய பகுதியைச் சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

## ஆடு வளர்ப்பு குறித்த பயிற்சி.

நாமக்கல்: மழை காலங்களில், வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு, பராமரிப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி வகுப்பு, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடக்கிறது' என, திட்ட ஒருங்கி ணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல்லில் உள்ள, கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின், வேளாண் அறிவியல் நிலையத்தில், பண்ணையாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு மழை காலங்களில் வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு, பராமரிப்பு குறித்த, ஒரு நாள் பயிற்சி வகுப்பு, வரும், 14ம் தேதி, காலை, 9 மணிக்கு நடக்கிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கரும்பு உற்பத்தியை அதிகரிக்க நாற்று நடவு முறைக்கு மானியம்

தர்மபுரி: கரும்பு உற்பத்தியை அதிகரிக்க, விவசாயிகளுக்கு நாற்று நடவு முறைக்கு வேளாண்மை துறையினர் மானியம் வ ழங்குகின்றனர்.தர்மபுரி மாவட்டத்தில்

பாலக்கோடு, பென்னாகரம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி உட்பட மாவட்டம் முழுவதும், 17 ஆயிரம் ஹெக்டர் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. இதில், 10ஆயிரம் ஹெக்டர் நேரடி நடவிலும், 7,000 ஹெக்டர் மறுதாம்பு முறையிலும் சாகுபடி செய்யப்படுகிறது. தர்மபுரி மாவட்ட வேளாண் அதிகாரி ஒருவர் கூறியதாவது: சில ஆண்டுகளாக எதிர்பார்த்த மழையில்லாதது உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கரும்பு உற்பத்தி குறைந்து வருகிறது. கரும்பு உற்பத்தியை அதிகரிக்க அரசு வேளாண்மைதுறை சார்பாக கடந்த, இரு ஆண்டுகளாக கரும்பு கருணை நடவு முறைக்கு பதிலாக, கரும்பு விதைப்பருப்பு சீவல்கள் மூலம், குழி தட்டுகளில் நாற்றுகள் தயாரித்து நடவு செய்யும் முறையை விவசாயிகளுக்கு அறிமுகந்படுத்தி வருகிறது. கரும்பு நாற்றுகள் கிடைக்கும் துல்லிய பண்ணைகள் குறித்த விபரங்களையும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஒரு ஏக்கர் கரும்பு நடவு செய்ய, 4 டன் எடை கொண்ட, 30 ஆயிரம் விதைப்பரு கருணை தேவைப்படுகிறது. ஆனால் நாற்றுக்கள் மூலம் நடவு செய்ய, 50 கிலோ கொண்ட, 5,000 விதைப்பருக்கள் மட்டும் போதுமானது ஆகும். நாற்றுக்கள் நடவு முறைக்கு குறைந்த அளவு தண்ணீரின் மூலம், அதிக மகசூல் கிடைக்கிறது. கருணை பயிரில் கிளை விடும் முளைகளின் எண்ணிக்கையை விட, நாற்றுக்கள் நடவு பயிர்களில், இரு மடங்கு கிளைவிடும் முளைகளின் எண்ணிக்கையில் உள்ளது. இதன் மூலம் விவசாயிகளுக்கு அதிகபட்சமாக, ஏக்கருக்கு, 150 டன் வரை மகசூல் கிடைத்து வருகிறது. நாற்று நடவு கரும்பு சாகுபடிக்கு அரசு, ஒரு ஹெக்டருக்கு, 30 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கி வருகிறது. மேலும் தேசிய நுண்ணுயிர் பாசன திட்டத்தின் கீழ் இலவசமாக சொட்டு நீர் பாசனம் அமைத்து தரப்படுகிறது. நாற்று முறையில், கரும்பு சாகுபடி செய்து மானியம் பெற விரும்பம் உள்ள விவசாயிகள் தர்மபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம், பாலக்கோடு, காரிமங்கலம், ö மாரப்பூர், அரூர், பாப்பிரெட்டிபட்டி ஆகிய பகுதிகளில் உள்ள உதவி தொடக்க வேளாண் அலுவலரிடம் நேரடியாக விண்ணப்பத்தை வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்

## "விதை நெல்லுக்கு தட்டுப்பாடு இல்லை' கோபி கூட்டுறவு சங்கத்தில் 250 டன் இருப்பு

கோபி: விதை நெல்லுக்கு, தட்டுப்பாடு ஏற்படாத வகையில், கோபி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், விவசாயிகள் பயன்பெற, 250

டன் விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இச்சங்கம், கடந்த, 1978ம் ஆண்டு முதல், விதை பெருக்கு திட்டத்தில், தரமான விதை நெல்லை உற்பத்தி செய்து வருகிறது. தமிழகத்தில் கூட்டுறவு துறை மூலம், கோவை துடியலூருக்கு அடுத்து, கோபியில் மட்டுமே விதை நெல் உற்பத்தி மையம் செயல்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, கீழ்பவானி மற்றும் மேட்டூர் பாசன பகுதிகளில் விவசாயிகளுக்கு, கோபி கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம், தாய் விதை நெல் தரப்படுகிறது. விவசாயிகள் வயலில், அதனை பயிரிட்டு, வேளாண் துறை யோசனைப்படி, அதை விதை நெல்லாக மீண்டும் உற்பத்தி செய்கின்றனர். இவ்வாறு உற்பத்தியாகும் விதை நெல், மீண்டும் சங்கத்துக்கே வழங்கப்படுகிறது. இந்த விதை நெல், சங்கத்தில் வீரியம் மிகுந்த, அதிக முளைப்பு திறன் கொண்ட விதை நெல்லாக நேர்த்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் விதை நெல், ஆண்டுதோறும் காவிரி டெல்டா பகுதிகளான, திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை உள்ளிட்ட மாவட்டங்களுக்கு, விதை நெல் அனுப்பப்படுகிறது.

தவிர, கீழ்பவானி, அமராவதி, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன் பாசன பகுதியில் உள்ள விவசாயிகளின் தேவைக்கு, விதை நெல் விற்பனை செய்யப்படுகிறது. நடப்பாண்டில், கோபி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 450 டன் விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டது. தரம், முளைப்பு திறன், கூடுதல் மகசூல், நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் உள்ளதாக, மிகுந்த தரக்கட்டுப்பாட்டுடன், இந்த விதை நெல்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

அவற்றில், புதுக்கோட்டை மாவட்டம் திருமயம், சத்தியமங்கலம், சிதம்பரம், படப்பை, சிவகங்கை, கவுண்டிச்சிபாளையம், மொடக்குறிச்சி, ஊத்தாங்கரை, போச்சம்பள்ளி, காவேரிபட்டிணம் உள்ளிட்ட பகுதிக்கு, 200 டன் அனுப்பப்பட்டுள்ளது. ஏ.எஸ்.டி., 16 ரக நெல் கிலோ, 32 ரூபாய் வீதம், 45 டன்னும், ஏ.டி.டி.ஆர்., 45, கிலோ 30 ரூபாய் வீதம், 85 டன், ஏ.டி.டி., 38 ரக நெல், கிலோ, 30 ரூபாய் வீதம், பத்து டன்னும், பி.பி.டி.எஸ்., ரக நெல் கிலோ, 33 ரூபாய் வீதம், 65 டன், ஐ.ஆர்., 20 ரக நெல், கிலோ, 32 ரூபாய் வீதம், 45 டன், என, இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விதை நெல் ரகங்கள் தட்டுப்பாடின்றி, விவசாயிகளுக்கு கிடைக்க இருப்பு வைக்கப்பட்டுள்ளது. கோபி, வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், தற்போது, 250 டன் விதை

நெல்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதுபற்றி, கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க செயலாளர் கதிர்வேல் கூறுகையில், ""விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி கிடைக்கும் வகையில், தற்போது, 250 டன் விதை நெல் மூட்டைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் மொத்தம், 1,000 டன் விற்பனை இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது,'' என்றார்.

## இன்று வரலட்சுமி நோன்பு மல்லி விலை கிலோ ரூ.500

ஈரோடு: இன்று கொண்டாடப்பட உள்ள, வரலட்சுமி நோன்பை முன்னிட்டு, ஈரோட்டில் மல்லி, முல்லை பூக்களின் விலை, கிலோ, 500 முதல், 600 ரூபாயாக அதிகரித்தது. தீர்க்க சுமங்கலியாக வாழ, லட்சுமி தேவியை வேண்டி, இன்று பெண்கள், வரலட்சுமி நோன்பு கடைபிடிக்கின்றனர். ஆடி மாத வளர்பிறை கடைசி வெள்ளியன்று, இந்த விரதத்தை பெண்கள் மேற்கொள்கின்றனர். லோக மாதாவாகிய லட்சுமிதேவி, பாற்கடலில் தோன்றி, விஷ்ணுவை மணந்தார். ராமாவாதாரத்தில், சீதையாக பிறந்து, அவருடன் வனத்தில் துன்பப்பட்டார். கணவர் மனம் கோணாமல் வாழ்ந்த லட்சுமிதேவியை போல், தாங்களும் வாழ வேண்டும், என்று வேண்டி பெண்கள், இன்று நோன்பு கடைபிடிப்பர். வரலட்சுமி நோன்பை முன்னிட்டு, நேற்று, ஈரோடு பூ மார்க்கெட்டில், மல்லி கிலோ, 500 முதல், 600 ரூபாய்க்கும், முல்லை, 400 முதல், 500 ரூபாய்க்கும், ஜாதிப்பூ, 300, அரளிப்பூ, 150, கோழிக்கொண்டை, 60, சம்பங்கி, 130 மற்றும் கனகாம்பரம், 500 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. இதுகுறித்து, பூ விற்பனையாளர் நாகராஜன் கூறியதாவது: வரலட்சுமி நோன்பை முன்னிட்டு, அனைத்து பூக்களின் விற்பனையும், அதிகரித்துள்ளது. மல்லிகைப்பூ விலை, கடந்த வாரம் கிலோ, 200 ரூபாய்க்கு விற்கப்பட்ட நிலையில், இன்று பண்டிகையை முன்னிட்டு கிலோ, 500 முதல், 600 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. அதேபோன்று முல்லை, கனகாம்பரம்,

ஜாதிப்பூ, அரளிப்பூ, சம்பங்கி உள்ளிட்டவை விலை அதிகரித்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**<u>ரூ.44 லட்சம் மதிப்பில் தேங்காய் பருப்பு விற்பனை</u>**

வெள்ளகோவில்: வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், புதன்கிழமை தோறும், தேங்காய் பருப்பு (கொப்பரை தேங்காய்) ஏலம் நடக்கிறது. நேற்றுமுன்தினம் நடந்த ஏலத்தில், 83 விவசாயிகள், தங்களது தேங்காய் பருப்புகளை, 855 மூட்டை பருப்புகள் ஏலத்துக்கு வந்திருந்தது. இதில், முதல் தர கொப்பரை பருப்பு, 110.65 ரூபாய்க்கும், இரண்டாம் தர கொப்பரை பருப்பு, 104.25 ரூபாய்க்கும் ஏலம் போனது. இந்த தரம் பிரித்தல், நேற்றுமுன்தினம் முதன்முதலாக நடந்தது. மேலும், வந்திருந்த பருப்பில், தேங்காய் பருப்பு தரம் பிரிக்கப்பட்டு, உயர்ந்த விலையாக, 103.25 ரூபாய்க்கும், தரம் குறைந்த தேங்காய் பருப்பு விலையாக, 80.25 ரூபாய்க்கு விற்பனையானது. நேற்று, 855 மூட்டைகளில், 44 ஆயிரத்து, 25 கிலோ பருப்பு ஏலத்துக்கு வந்திருந்தது. மொத்தம் தேங்காய் பருப்பு, 43 லட்சத்து, 81 ஆயிரத்து, 400 ரூபாய்க்கு, விற்பனையானது. கடந்த வாரத்தை விட, தேங்காய் பருப்புக்கு, அதிக விலை கிடைத்ததால், தென்னை விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். இந்த வாரம் அழுகல் பருப்பு குறைவாக வந்திருந்தது. கடந்த வாரம், 626 மூட்டைகள் பருப்பு வந்திருந்தது. உயர்ந்த விலையாக, 101.65 ரூபாய்க்கும், இரண்டாம் தர பருப்பு, 83.65 ரூபாய்க்கும் விற்பனையானது. கடந்த வாரம், 29 லட்சத்துக்கு விற்பனையானது. இத்தகவலை, ஒழுங்கு முறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மகுடேஸ்வரன் தெரிவித்தார்.

**<u>துவங்கும்! : வாழை வணிக வளாகம் விரைவில்.... : விவசாயிகளுக்கு ஏற்றுமதி வாய்ப்பு</u>**

திருச்சி: திருச்சி அருகே, விரைவில் வாழை வணிக வளாகம் செயல்பட உள்ளது. இதனால், விவசாயிகளுக்கு வாழைத்தார் ஏற்றுமதிக்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. திருச்சி மாவட்டத்தில் முசிறி, தொட்டியம், மண்ணச்சநல்லூர், அந்தநல்லூர், மணிகண்டம், லால்குடி, திருவெறும்பூர் உள்ளிட்ட பகுதிகளில், ஒரு லட்சம் ஏக்கரில் வாழை பயிரிடப்படுகிறது. இதில், அறுவடையாகும் வாழைத்தார்களை உள்ளூர் மற்றும் வெளியூர் மார்கெட்டில் விற்பனை செய்து

வருகின்றனர். மேலும், வாழை அறுவடைக்கு பின், பின்செய் நேர்த்தி மற்றும் சந்தை சார்ந்த உற்பத்தி போன்றவற்றில் விவசாயிகளிடையே போதிய விழிப்புணர்வு இல்லாததால், 20 முதல் 30 சதவீதம் வாழை, பயன்பாட்டுக்கு முன் வீணாகிறது. இந்நிலையில், வாழை அறுவடைக்கு பின் ஏற்படும் இழப்பை சரிகட்டி, வாழையை குறைந்த செலவில் பாதுகாத்து, நல்ல விலை கிடைக்கும் போதும், விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு, விவசாயிகள், தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்தனர். இதையடுத்து, தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில், ஜீயபுரம் அருகே திருச்செந்துறையில், ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகம், நான்கு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதில், 15 நாள் முதல், ஒரு மாதம் வரை, வாழையை பாதுகாப்பாக வைக்க, குளிர்சாதன கிடங்கு கட்டப்பட்டுள்ளது. இதை, கடந்த ஜூன், 30ம் தேதி, தமிழக முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்தார். இதில், 1,000 டன் வாழை வரை பாதுகாக்க முடியும். மேலும், வாழையை கழுவி மூட்டைகள் கட்டும் வசதி கொண்ட அறைகள், வாழைத் தார்களை தரம் பிரிக்கும் அறைகள், பரிவர்த்தனை கூட்டம் மற்றும் 15 கடைகள் கட்டப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் உற்பத்தி செய்யும் வாழைதார்களுக்கு நல்ல விலை கிடைப்பதுடன், ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் அதிகரிக்கும்.
இதுகுறித்து, திருச்சி வேளாண் சந்தை மைய அதிகாரிகள் கூறியதாவது:
வாழை வணிக வளாகம் தொடர்பான செலவுகள், திருச்சி விற்பனை குழு மூலமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வணிக வளாகத்தில் உள்ள, 15 கடைகளுக்கான கட்டணம், விவசாயிகளுக்கு ஏற்றதாக இருக்கும். குளிர்பதன கிடங்கில் மின்தடை பிரச்னை ஏற்படாத வகையில், ஜெனரேட்டர்கள் உள்ளது. வாழை வணிக வளாகம் இந்த மாதத்தில் செயல்பட துவங்கும், என்றனர்.

## களரம்பட்டியில் காய்கறி சாகுபடி யர் தொழில்நுட்ப பயிற்சி முகாம்

பெரம்பலூர்: பெரம்பலூர் அருகே உள்ள, களரம்பட்டி கிராமத்தில், தோட்டக்கலை துறை சார்பில், காய்கறிகள் மற்றும் சின்ன வெங்காயம் சாகுபடி குறித்த நவீன உயர் தொழில்நுட்ப சாகுபடிக்கான பயிற்சி முகாம் நடந்தது. பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை சார்பில், ஒரு ஹெக்டேரில், ஒரு லட்சம் பெருக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 2014-2015ம் ஆண்டிற்கு, மாவட்ட அளவில் நான்காயிரம் ஹெக்டரில் காய்கறிகள்

சாகுபடி செய்யவும், இரண்டாயிரம் ஹெக்டரில், சின்ன வெங்காயம் சாகுபடி செய்யவும், இலக்கு நிர்ணயித்து உள்ளனர். மாவட்டத்தில் வட்டாரங்களில் உள்ள விவசாயிகளுக்கு, சின்ன வெங்காயம் மற்றும் காய்கறி சாகுபடி குறித்த பயிற்சி முகாமை, களரம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வளாகத்தில், தோட்டக்கலைத் துறை துணை இயக்குனர் (பொ) இந்திரா தொடக்கிவைத்தார். வாலிகண்டபுரம் வேளாண் அறிவியல் மைய தோட்டக்கலை தொழில் நுட்ப வல்லுநர் கதிரவன் பேசுகையில், தோட்டக்கலை பயிர்களான காய்கறி சாகுபடி செய்வதன் மூலம், விவசாயிகளுக்கு தொடர்ந்து வருமானம் கிடைக்கும். விவசாயிகள் மண் பரிசோதனை செய்து, மண்ணில் உள்ள சத்துக்கள் அடிப்படையில், சாகுபடி செய்யப்படும் பயிருக்கு ஏற்ற, உரங்களை உரிய அளவில் இடுதல், விதை நேர்த்தி, வீரியரக காய்கறிகள் சாகுபடியில் குழித்தட்டு முறையில் திரட்சியான நாற்றுகள் தயாரித்தல், சொட்டு நீர் பாசனம் அமைத்து, காய்கறிகள் சாகுபடி மேற்கொள்ள வேண்டும். இருப்பில் உள்ள நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி, அதிக பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ளுதல், நீர்வழி உரமிடுதல் மூலம் உரச்செலவை குறைத்து, உரங்கள் வீணாவதை தவிர்த்தல் மற்றும் களைக்கட்டுப்பாடு குறித்து விளக்கம் அளித்தார். பயிற்சியில், தோட்டக்கலை உதவி இயக்குனர் (பொ) ஆனந்தன், தோட்டக்கலை உதவி அலுவலர்கள் மகேஸ்வரி மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் முகாமில் கலந்துகொண்டனர்.

## <u>சம்பா பருவ நெல் பயிருக்கு காப்பீடு செய்ய அழைப்பு</u>

தஞ்சாவூர்: "சம்பா பருவ நெல் பயிருக்கு காப்பீடு செய்ய, நவம்பர், 30ம் தேதி கடைசி," என, தேசிய வேளாண் காப்பீட்டு திட்ட, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பழனியப்பன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டசெய்திக்குறிப்பு: சம்பா பருவத்தில் மேம்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டு திட்டமாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி, விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய காப்பீட்டு தொகை முழுவதையும், தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனமே செலுத்திவிடும். முன்பு இருந்தது போல மத்திய, மாநில அரசுகள், இனி வழங்காது. இத்திட்டத்தில், விவசாயிகள் வயலில் சாகுபடி பணிகளை துவங்கிய பிறகு, போதுமான மழை அல்லது அதிக மழை ஆகிய காரணங்களால் விதைப்பு அல்லது நடவுப்பணியை தொடர முடியாமல் போனால், பயிர் காப்பீட்டு நிறுவனமே இழப்பீட்டு

தொகையை வழங்கும். மகசூல் பாதிப்பு, 50 சதவீதத்துக்கும் அதிகமாக இருந்தால், 25 சதவீத காப்பீட்டுத்தொகை முதலில் வழங்கப்படும். மகசூல் இழப்பு துல்லியமாக கணக்கிட்ட பின்னர், மீதித்தொகை வழங்கப்படும். இத்திட்டத்தில் நடப்பு சம்பா, தாளடி பயிருக்கு சேர வரும், நவம்பர், 30ம் தேதி கடைசி நாளாகும். விவசாயிகள் தங்கள் பயிரை, ஒரு ஏக்கருக்கு, 11,925 ரூபாய்க்கு காப்பீடு செய்யலாம். இதற்கு, 13 சதவீதம் பிரிமிய தொகையாக, 1,570 ரூபாயில் பிரிமிய தொகை, 950 ரூபாய் மானியம் போக மீதமுள்ள, 620 ரூபாய் செலுத்த வேண்டும். கடன் வாங்கும் விவசாயிகள், கூட்டுறவு சங்கத்திலோ அல்லது தேசிய வங்கிகளிலோ கடன் பெறும்போது, பிரிமியம் பிடித்து கொள்ளப்படும். கடன் வாங்காத விவசாயிகள், வங்கியிலோ அல்லது தஞ்சை மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்த தொண்டு நிறுவன முகவர்களிடமோ, விண்ணப்பம் பெற்று, சிட்டா, அடங்கல் மற்றும் தொகைக்கான டிடி., யை கொடுத்து, காப்பீட்டு திட்டத்தில் சேரலாம். இதற்கு தாலுகா வாரியாக, தொடர்பு கொள்ள வேண்டிய முகவர்களின் செல்ஃபோன் எண்: தஞ்சை, 94863 19549, பூதலூர், 99656 08672, திருவையாறு, 04362- 261633 பாபநாசம், 90252 74876, ஒரத்தநாடு மற்றும் திருவோணம், 93445 63645, கும்பகோணம் மற்றும் திருவிடைமருதூர், 94439 85080, அம்மாப்பேட்டை 94428 71167. மேலும் மாவட்ட முழுவதும் தொடர்புக்கு, 94437 80661 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் என அறிவித்துள்ளார்.

## <u>கால்நடை பசுந்தீவனத்திற்கு பசும்புல் வளர்ப்பில் ஆர்வம்</u>

தேவதானப்பட்டி : பெரியகுளம் தாலுகாவில் கால்நடை வளர்ப்பவர்கள் பசுந்தீவனமாக சீமைப்புல் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். பெரியகுளம் தாலுகாவில் தேவதானப்பட்டி, கெங்குவார்பட்டி, காமக்காபட்டி, மஞ்சளார் ஆகிய கிராமங்கள் மஞ்சளார் ஆற்றங்கரையிலும், வடுகபட்டி, மேல்மங்கலம், ஜெயமங்கலம், சிந்துவம்பட்டி, குள்ளப்புரம் கிராமங்கள் வராகநதியின் கரையோரத்திலும், வைகைபுதூர், முதலக்கம்பட்டி, சங்கரமூர்த்திபட்டி, சந்திராபுரம், மருகால்பட்டி, புதூர், அ.வாடிப்பட்டி கிராமங்கள் வைகை ஆற்றங்கரையோரத்திலும் அமைந்துள்ளன. இக்கிராமங்களில் விவசாயம்

முக்கியத் தொழிலாக உள்ளது. கால்நடை வளர்ப்பது லாபகரமான தொழில் என்பதால் இக்கிராமங்களில் அதிகளவில் கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. கடந்த மூன்றாண்டுகளாக இப்பகுதியில் பருவமழை பொய்த்ததால் நீர்நிலைகள் அனைத்தும் வறண்டு கிடக்கின்றன. நீர் நிலைகளை ஆதாரமாக கொண்ட விவசாய கிணறுகள் வறண்டுள்ளன. இதனால் விவசாயப்பணிகள் முடங்கியுள்ளது. இதனால் கால்நடைகளுக்கு தீவன தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பசுந்தீவனம் கிடைக்கவில்லை. பால் உற்பத்தியும் குறைந்து வருகிறது. தீவனத்தட்டுப்பாடு காரணமாக பலர் கால்நடைகளை விற்பனை செய்து வருகின்றனர். *சீமைப்புல் வளர்ப்பில் ஆர்வம்: பெரியகுளம் பகுதி கால்நடை வளர்ப்பவர்கள் நிலங்களை குத்தகை அல்லது ஒத்திக்கு வாங்கி சீமைப்புல் வளர்ப்பில் ஆர்வம் காட்டி வருகின்றனர். நடவு செய்து 45 நாட்களுக்கு பிறகு புல் அறுவடை துவங்கி 60வது நாள் வரை அறுவடை கிடைக்கும். அறுவடை செய்த நாளில் இருந்து 45 நாட்கள் கழித்து மீண்டும் அறுவடை செய்யலாம். போதிய அளவு தண்ணீர் வசதி இருந்தால் மூன்றாண்டுகள் வரை அதன் பலனை அனுபவிக்கலாம். சீமைப்புல் வளர்ப்பதற்கு அரசு மானியம் வழங்கி வருகிறது. இதனால் கிடைக்கும் குறைந்த அளவு நீரைக் கொண்டு குறைந்த நாளில் பலன் தரக்கூடிய சீமைப்புல் வளர்ப்பில் கால்நடை வளர்ப்போர் ஆர்வம் காட்டி வருகின்றனர். கால்நடை வளர்ப்போர் கூறுகையில்," கறவைமாடுகளுக்கு தேவையான பசுந்தீவனம் கிடைக்கவில்லை. இதனால் பால் உற்பத்தியும் குறைகிறது. வறட்சியில் ஏற்பட்டுள்ள தீவன தட்டுப்பாட்டை போக்குவதற்காக சீமைப்புல் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோம், என்றனர்.

## "காட்பட்டியா' வகை சந்தனம் கிலோ ரூ.15,500க்கு ஏலம்

மூணாறு : மறையூரில் நேற்று நடந்த சந்தன கட்டை ஏலத்தில், ஐந்தாம் ரகத்தைச் சேர்ந்த "காட் பட்டியா' வகை கட்டைகளுக்கு கிலோ 15 ஆயிரத்து 500 ரூபாய் விலை கிடைத்தது. அரசுக்கு வரி உட்பட 23.24 கோடி ரூபாய் வருமானம் கிடைத்தது. மறையூர், காந்தலூர் பகுதிகளில் 55 ஆயிரத்துக்கும் அதிகமாக சந்தன மரங்கள் உள்ளன. இவற்றை வெட்டிக் கடத்துவது வாடிக்கையாகிவிட்டது.

கடத்தலின் போது சிக்கும் சந்தன கட்டை மற்றும் இயற்கை சீற்றத்தால் சேதமடையும் சந்தன மரங்கள் மறையூர் சந்தன டிப்போவில் பாதுகாக்கப்பட்டு வழக்குகளில் இருந்து விடுபட்ட சந்தன கட்டைகள் ஏலம் விடப்பட்டு வருகிறது. ஆண்டுடிற்கு ஒரு முறை ஏலம் நடப்பது வழக்கம். இந்தாண்டு கடந்த பிப்ரவரியில் ஏலம் நடந்தது. அப்போது ஏலத்திற்கு வைக்கப்பட்ட 56.569 டன் சந்தன கட்டைகளில், 38.586 டன் ஏலம் போனது.இதன் மூலம் அரசுக்கு ரூ.23 கோடி வருமானம் கிடைத்தது. இந்நிலையில் நேற்று வனத்துறை கூடுதல் தலைமை கன்சர்வேட்டர் பிரசாத், மறையூர் டி.எப்.ஓ., சாஜிவர்க்கீஸ், ரேஞ்சர் வினோத்குமார் ஆகியோர் தலைமை மீண்டும் ஏலம் நடந்தது. ஏலத்தில் தமிழகம், டில்லி உட்பட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 26 நிறுவனங்கள் பங்கேற்றன. ஏலத்திற்காக வைக்கப்பட்ட 59.147 டன் சந்தன கட்டையில், 35.4 டன் கட்டைகள் ஏலம் போனது. இதன் மூலம் வரி உட்பட அரசுக்கு ரூ. 23.24 கோடி வருமானம் கிடைத்தது. சந்தன கட்டைகள் 14 வகையாக தரம் பிரிக்கப்பட்டு, நடைபெற்ற ஏலத்தில், ஐந்தாம் ரகத்தைச் சேர்ந்த "காட் பாட்டியா' வகை கிலோ ரூ. 15 ஆயிரத்து 500 விலை கிடைத்து சாதனை ஏற்படுத்தியது.

## பெரியாறு அணை நீர்மட்டம் உயர்வு; சிவகங்கை விவசாயிகளுக்கு வரப்பிரசாதம்

பெரியாறு - வைகை தண்ணீரை பெறும் கடைக்கோடி மாவட்டம் சிவகங்கை. இங்கு, பெரியாறு - வைகை பாசன விரிவாக்க கால்வாய் திட்டம் மூலம், 25 ஆண்டுகளுக்கு முன், மேலூர் அருகே திருவாதவூரில் இருந்து சிவகங்கை அருகே கொட்டகுடி, தமறாக்கி, குமாரபட்டி, அரசனூர், நல்லாகுளம், மாத்தூர் வரையும், தமறாக்கியில் இருந்து, வி.மலம்பட்டி, கூட்டுறவுபட்டி, உசிலம்பட்டி, இடையமேலூர், ஈசனூர், காஞ்சிரங்கால், சிவகங்கை, டி.புதூர், சூரக்குளம், செங்குளம், செம்பனூர், அதப்படக்கி வழியே மறவமங்கலம் வரை இரண்டு பிரிவாக, நீட்டிப்பு கால்வாய்கள் கட்டப்பட்டது. இது தவிர, மேலூர் அருகே காஞ்சிரம்பட்டி விலக்கில் இருந்து, சிங்கம்புணரி, திருப்புத்தூருக்கும் நீட்டிப்பு

கால்வாய்கள் கட்டப்பட்டன. பயன்பாடு : ஆண்டுதோறும் பெய்யும் பருவ மழையினால், பெரியாறு - வைகை அணைகளில் நீர்மட்டம் உயரும் பட்சத்தில் அங்கிருந்து திறந்து விடப்படும் தண்ணீர், தேனி, மதுரை, திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் பயன் பெற்றது போக, எஞ்சிய தண்ணீரை சிவகங்கை விவசாயிகள் பெறும் நோக்கில், முன்னாள் அமைச்சர் ராஜகண்ணப்பன், பெரியாறு- வைகை பாசன நீட்டிப்பு கால்வாய் திட்டத்தை, சிவகங்கைக்கு கொண்டு வந்தார். தண்ணீரே வரவில்லை : இங்கு வரும் தண்ணீர், பெரும்பாலான கண்மாய்களை நிரப்பி, பாசனத்திற்கு பயன்படும். இதன் மூலம், சிவகங்கை மாவட்ட விவசாயிகள், நெல், கரும்பு, வாழை, காய்கறிகள் விளைவித்து பயன்பெறுவர். ஆனால், கடந்த 20 ஆண்டுகளாக, பெரியாறு அணையில், நீர்மட்டம் உயர்த்தப்படாத நிலையில், அங்கு திறந்துவிடப்படும் தண்ணீர் தேனி, மதுரை மாவட்ட விவசாயிகளின் தேவையை மட்டுமே பூர்த்தி செய்தது. இதனால், கடைக்கோடி சிவகங்கை விவசாயிகள் பயன்பெற முடியாமல் இருந்தது. சேதம் : பெரியாறு- வைகை பாசன நீட்டிப்பு கால்வாய்களில் நீர் வரத்தின்றி, கால்வாய்களில் போடப்பட்ட சிமென்ட் சிலாப்களை மர்ம நபர்கள் சேதப்படுத்தினர். தொடர் பராமரிப்பின்றி, சிமென்ட் கால்வாய்கள், நீர் திறக்கும் மதகுகள் அனைத்தும் சேதமடைந்து விட்டன. நீர்வரத்து இல்லாததால், 11,600 ஏக்கர் நிலங்களை சேர்ந்த, 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாய குடும்பங்கள் பயன்பெற முடியாமல் போனது. முதல்வர் ஜெ., கருணை : தொடர்ந்து 2 ஆண்டுகளுக்கும் மேலாக, மழையின்றி தென்மாவட்டத்தில் விவசாயம் பொய்த்தது. எனவே, விவசாயிகள் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் நோக்கில், முதல்வர் ஜெ., பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரை உயர்த்த நடவடிக்கை எடுத்தார். அணையின் நீர்மட்டம் 142 அடியாகும் பட்சத்தில், அங்கிருந்து பாசனத்திற்காக திறந்துவிடப்படும், தண்ணீர் தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு பயன் அளிக்கும். இதன் மூலம், உணவு உற்பத்தி

அதிகரிக்கும். எனவே, பெரியாறு - வைகை பாசன நீட்டிப்பு கால்வாய்கள் செல்லும் கடைக்கோடி மாவட்டமான சிவகங்கைக்குள் செல்லும் கால்வாய்களையும் செப்பனிட, சட்டசபையில் முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

செம்மையான பணி : எனவே, முதல்வரின் உத்தரவுக்கு இணங்க, பொதுப்பணித்துறை அதிகாரிகள், சேதமான பாசன கால்வாய்களை முறைப்படி செம்மைபடுத்துவதோடு, கால்வாய் ஆக்கிரமிப்புகளை பாரபட்சமின்றி அகற்றி, பெரியாறு - வைகை பாசன தண்ணீர் முழுமையாக கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும், என, விவசாயிகள் தெரிவித்தனர். காவிரி, வைகை, குண்டாறு இணைப்பு கால்வாய் நீர்பாசன சங்க மாநில பொது செயலாளர் எம்.அர்ச்சுணன், சிவகங்கை ஒருங்கிணைப்பாளர் எல்.ஆதிமூலம் ஆகியோர் கூறும்போது, கடைக்கோடி சிவகங்கை மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில், பெரியாறு அணை நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த, நடவடிக்கை எடுத்த முதல்வர் ஜெ.,விற்கு மாவட்ட விவசாயிகள் சார்பில் நன்றி தெரிவிக்கிறோம். இதன் மூலம், விவசாயம் செழித்து, உணவு உற்பத்தி அதிகரிக்கும். இதற்காக, கால்வாய்களை தயார் நிலையில் வைக்க வேண்டும், என்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>அரூரில் மரவள்ளியில் மாவு பூச்சி விழிப்புணர்வு கூட்டம்</u>**

அரூர்,: மரவள்ளி பயிரில் மாவு பூச்சி கட்டுபடுத்துவது குறித்து விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கூட்டம் கோபிநாதம்பட்டியில் நடந்தது. அரூர் வேளாண் வரிவாக்க துணை இயக்ககம் மற்றும் பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலையம் ஆகியவை இணைந்து அரூர் அடுத்த கோபிநாதம்பட்டி கூட்ரோடில் மரவள்ளி பயிரில் மாவு பூச்சி கட்டுபாடு குறித்த விழிப்புணர்வு கூட்டத்தை நடத்தியது.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார் வரவேற்றார். வேளாண் அறிவியல் நிலைய தலைவர் தமிழ்செல்வன் கலந்து கொண்டு வேளாண் தொழில்நுட்பங்களை பற்றி எடுத்துரைத்தார். உதவி பேராசிரியர் சண்முகம் மாவு பூச்சி கட்டுபாடு, ஒட்டுண்ணிகளின் செயல்பாடுகள் பற்றி பேசினார். இதில் உதவி வேளாண் அலுவலர் திருநாவுக்கரசு, வட்டார தலைவர் சாமிகண்ணு, உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் வீரதளபதி, திருப்பதி, அனைத்து பூச்சிமருந்து விற்பனையாளர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## ஒழுங்குமுறை கூடத்தில் சின்ன வெங்காயம் 6,669 கிலோ ஏலம்

திருச்சி, : திருச்சி மாவட்டம், துறையூர், தா.பேட்டை, உப்பிலியபுரம் வட்டாரங்களில் சின்ன வெங்காயம் அதிக அளவில் சாகுபடி செய்யப் பட்டு வருகிறது. துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் சின்ன வெங் காயம் மறைமுக ஏலம் 4 வாரமாக நடை பெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில் 124 மூட்டை சின்ன வெங்காயத்துடன் 20 விவசாயிகள் பங்கேற்றனர். இதில் 12 வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். மொத்தம் ரூ.1லட்சத்து ஆயிரத்து 525 மதிப்பில் 6,669 கிலோ சின்ன வெங்காயம் ஏலம் போனது. இதில் தரமான வெங்காயம், அதிக பட்சமாக ஒரு கிலோ ரூ.23க்கும், சராசரியாக கிலோ ரூ.17க்கும் ஏலம் போனது. இடைத்தரகர்கள் இன்றி, கமிஷன் இல்லாமல் விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணமும் பட்டுவாடா செய்யப்பட்டது. அடுத்த வாரம் புதன்கிழமை தொடர்ந்து சின்னவெங்காயம் ஏலம் நடை பெற உள்ளதால் இருப்பில் வைத்துள்ள துறையூர், உப்பிலியபுரம், தா.பேட்டை விவசாயிகள், தங்களிடம் உள்ள சின்ன வெங்காயத்தை கொண்டு வந்து மறைமுகஏலத்தில் கலந்து கொள்ளும்படி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை அலுவலர்கள் கேட்டுக் கொண்டனர்.

## வேரழுகல் நோயை கட்டுபடுத்துவது எப்படி? சிறுகமணி ஆராய்ச்சி நிலையம் விளக்கம்

திருச்சி, : சூரியகாந்தியை வேரழுகல் நோய் தாக்கி வருவதாக தினகரனில் படத்துடன் சுட்டிகா ட்டியது தொடர்பாக அந்த நோயை எவ்வாறு கட்டுப்படுத்துவது எப்படி? என விவசாயிகளுக்கு சிறுகமணி ஆராய்ச்சி நிலையம் விளக்கம் அளித்துள்ளது. தமிழ்நாட்டில் திருச்சி, கரூர், திண்டுக்கல், விருதுநகர், தூத்துக்குடி மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் மாற்றுப் பயிராக சூரியகாந்தி சாகுபடி செய்யப்படுகிறது. சூரியகாந்தி சாகுபடியின் நிலப்பரப்பு 80 சதவீதமும், உற்பத்தி 49 சதவீதமும் பங்கு வகிக்கிறது. திருச்சி மாவட்டத்தில் தா.பேட்டை, முசிறி, துறை யூர், உப்பிலியபுரம், தொட் டியம், ஸ்ரீரங்கம் தாலுகா இனாம்புலியூர் உள்ளிட்ட பகுதிகளில் குறுவை நெல்லுக்கு மாற்றுப் பயிராக சுமார் 5ஆயிரம் ஏக்கரில் ஆழ் குழாய் கிணறு மூலமாக சூரியகாந்தி பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஜூன் மாதம் சாகுபடி செய்யப்பட்ட இந்த சூரியகாந்தி 90 நாட்களில் அறுவடைக்கு தயாராகி வருகிறது. முதல்வர் தொகுதியான ஸ்ரீரங்கம் தாலுகா இனாம்புலியூரில் சூரியகாந்தி சாகுபடி செய்யப்பட்டு 5அடி உயரத்தில் உள்ளது. இந்த மாதம் கடைசியில் அறுவடைக்கும் தயாராகி வரும் நேரத்தில் கொஞ்சம், கொஞ்சமாக வேர்அழுகல் நோய் சூரியகாந்தியை தாக்கி வருவதால் விவசாயிகள் கடும் விரக்தியில் இருந்து வருவதாக கடந்த 3ம் தேதி தினகரனில் படத்துடன் விரிவாக சுட்டிகாட்டப்பட்டு இருந் தது. இது தொடர்பாக அந்த நோயை எவ்வாறு கட்டுப்படுத்துவது? என விவசாயிகளுக்கு சிறுகமணி ஆரா ய்ச்சி நிலையம் விளக்கம் அளித்துள்ளது. இதுகுறித்து நிலைய பேராசிரியர் அசோகன் தெரிவித் திருப்பதாவது: திருச்சி மாவட்டத்தில் சூரியகாந்தி பயிரானது குறுவை நெல்லுக்கு மாற்றுப் பயிராக பயரிடப்பட்டுள்ளது. பூக்கும் பருவத்தில் சூரியகாந்தி பயிரில் சில இடங்களில் வேரழுகல் நோயின் தாக்குதல் தென்படுகிறது. இந்த அறிகுறிகள் தென்பட்டால் விவசாயிகள் தகுந்த மேலாண்மை முறைகளை கையாண்டு வேரழுகல் நோயை கட்டுப்படுத்தி அதிக விளைச்சல் பெறலாம். அறிகுறிகள்: சூரியகாந்தியை வேர் அழுகல் நோய் தாக்கும் போது பூக்கும் செடிகள் திடீரென வாட ஆரம்பி க்கும். பாதிக்கப்பட்ட செடிகளின் தண்டுப்பகுதியில் சாம்பல் கலந்த நிற வரிகள் காணப்படும். பொதுவாக வறட்சியால் பாதிக்கப்பட்ட வயல்களில் நோயின் தாக்குதல் அதிகமாக தென்படும். மேலாண்மை முறைகள்:

மேலாண்மை முறைகளில், விதை நேர்த்தி டிரைக்கோடெர்மா விரிடி 4கிராம்/கிலோ அல்லது சூடோ மோனாஸ் ப்ளூரசன்ஸ் 10கிராம்/கிலோ என்ற அளவில் விதை நேர்த்தி செய்ய வேண்டும். ஒரு கிலோ சூடோமோ னாஸ், ஒரு கிலோ டிரைக்கோடெர்மா விரிடி மற்றும் 100 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து நடவு செய்த 30ம் நாள் மண்ணில் இட்டு நீர் பாய்ச்சவும். வறட்சியால் பாதித்த பயிர் நோயின் தாக்குதலுக்கு ஏதுவாக இருப்பதால் சீரான இடை வெளியில் நீர்பாசனம் செய்து வறட்சி ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட இடங்களில் கார்பென்டசிம் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம் என்ற அளவில் கலந்து மண்ணில் ஊற்றவும். தொடர்ந்து சூரியகாந்தி பயிரிடப்படும் பகுதிகளில் பயிர் சுழற்சி முறையை கையாள வேண்டும். இவ்வாறு விளக்கமளித்துள்ளார்.

## விவசாயிகளுக்கு சான்று விதை உற்பத்தி பயிற்சி

நீடாமங்கலம், : திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் மற்றும் வலங்கைமான் வட்டாரத்தை சேர்ந்த அரசு விதை உற்பத்தியாளர்களுக்கு சான்று விதை தொடர் பான பயிற்சி காஞ்சிகுடிகாடு கிராமத்தில் நடந்தது. திருவாரூர் விதை சான்று உதவி இயக்குனர் கல்யாணசுந்தரம் தலைமை தாங்கினார். பயிற்சியை நீடாமங்கலம் வேளாண் உதவி இயக்குனர் இளஞ்செழியன் தொடங்கி வைத்தார். விதை உற்பத்தி செய்வது தொடர்பான பயிற்சியை வலங்கைமான் விதை சான்று அலுவலர் வீரபாண்டியன் நடத்தினார். சான்று விதைகளை விதைக்கு பயன்படுத்துவதால் நல்ல முளைப்பு திறன், தேவையான பயிர் எண்ணிக்கை, சீரான பயிர் வளர்ச்சி, ஒரே நேரத்தில் பூத்து முதிரும், ஒரே நேரத்தில் அறுவடை செய்யலாம், கலப்பிடமில்லாத அதிக மகசூல், விளை பொருளுக்கு நியாயமான விலை கிடைக்கும். விவசாயிகளுக்கு நன்மைகள் ஏற்படுகிறது. விதை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் சான்று விதை உற்பத்தியில் கையாளப்படும் தொழில் நுட்பங்களை நன்றாக அறிந்து செயல்பட்டால் தமிழ்நாட்டில் சான்று விதை உற்பத்தி அதிகரிக்கும். விவசாயிகளுக்கு தரமான விதை கிடைக்கும் என பயிற்சியில் விளக்கமளிக்கப்பட்டது. நீடாமங்கலம் விதை சான்று அலுவலர்

இளங்கோவன், அரசு விதைப்பண்ணை மேலாண்மை அலுவலர் நிஷாத், திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை உதவி விதை அலுவலர்கள் நீடாமங்கலம் ராஜேந்திரன், வலங்கைமான் ஸ்டாலின் செய்திருந்தனர்.

## <u>சம்பா பருவத்துக்கு விதைக்க வேண்டிய நெல் ரகங்கள் வேளாண் அதிகாரி ஆலோசனை</u>

மன்னார்குடி, : சம்பா பருவத்துக்கு விதைக்க வேண்டிய நெல் ரகங்கள் குறித்து மன்னார்குடி வேளாண் உதவி இயக்குனர் உத்திராபதி விளக்கம் அளித்துள்ளார். இதுபற்றி அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: இந்த ஆண்டு சம்பாவிற்கு ஏற்ற நீண்ட கால பயிராக சிஆர்.1009 மிகவும் பொருத்தமானதாகவும், லாபகரமாக இருக்கும். போர்வெல் பாசனம் உள்ளவர்கள் இப்போதே சாகுபடியை தொடங்கி விடலாம். நாற்றங்கால் நடவு அல்லது நேரடி விதைப்பிலும் ஈடுபடலாம். ஏடிடி 38, 39, 49, 50, கோ 50, பியீடிசி, எல்ஆர்ஏ 51 மற்றும் 66 ஆகியவை சம்பாவிற்கு ஏற்ற நெல் ரகங்கள் ஆகும். இதில் சிஆர்.1009 மிகவும் லாபகரமாக இருக்கும். இதைத்தான் விவசாயிகளுக்கு இந்த சம்பா சாகுபடிக்கு சிபாரிசு செய்கிறோம். நடவு முறையில் திருந்திய முறையில் சாகுபடி செய்தால் மகசூல் கூடுதலாக கிடைக்கும். சாதாரண முறையில் ஏக்கருக்கு 30 மூட்டை என்றால் திருந்திய முறையில் 45 மூட்டை வரை கிடைக்கும். இந்த முறையில் பூச்சி நோய் தாக்குதல் குறைவு. ஏக்கருக்கு 2 கிலோ விதை போதும். நாற்றங்கால் விட தேவை இல்லை. மேட்டுப்பாத்தியில் நாற்றை தயார் செய்து 14 நாளில் பயன்படுத்திக் கொள்ளலாம். செலவும் குறையும். சிஆர்.1009 விதை தற்போது கூத்தாநல்லூர் வேளாண் கிடங்கில் கிடைக்கிறது. தாளடி பயிருக்கு கேஜிஎல் 1798 நல்ல ரகம். அது மன்னார்குடி கிடங்கில் இருப்பு உள்ளது. விதை எங்கு கிடைத்தாலும் விதை நேர்த்தி செய்து பரிசோதித்து விதைக்க வேண்டும். அவ்வப்போது வேளாண்துறையை அணுகி சம்பா சாகுபடிக்கான

ஆலோசனைகள் பெற்று விவசாயிகள் பலனடையலாம். இவ்வாறு உதவி இயக்குநர் உத்திராபதி தெரிவித்துள்ளார்.

## <u>மணிலா பயிரை பூச்சி தாக்குதலில் இருந்து பாதுகாப்பது எப்படி? வேளாண் அதிகாரி விளக்கம்</u>

திருவண்ணாமலை, : நிலக்கடலை பயிரை பூச்சிதாக்குதலில் இருந்து பாதுகாத்துக்கொள்வது எப்படி? என்று வேளாண்மை அதிகாரி விளக்கமளித்துள்ளார். திருவண்ணாமலை மாவட்டத்தில் நிலக்கடலை பயிரானது மிக அதிக பரப்பளவில் மானாவாரி சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டத்தில் நிலவி வரும் தட்பவெப்பநிலை காரணமாக நிலக்கடலையில் வேரழுகல் நோய், சுருள்பூச்சி மற்றும் புகையிலை வெட்டுப்புழு வளர வாய்ப்பு உள்ளது. பொதுவாக வேரழுகல் நோய் தாக்கிய பயிரின் அடிதண்டு பகுதியில் கருமை அல்லது பசுமை நிற பூஞ்சான வளர்ச்சியும், வேர் பகுதி அழுகி விடுவதால், காய்ந்து விடும். நோய் தாக்கப்பட்ட பயிரை பிடுங்கும்போது செடி மட்டும் வந்து விடும். வேர்பகுதி மண்ணிலே நின்று விடும். நோயை கட்டுப்படுத்த டிரைகோடெர்மா விரிடி 1 கிலோ மற்றும் 25 கிலோ தொழு உரத்துடன் கலந்து 15 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்கவும். சுருள்பூச்சி புழு இரண்டு அல்லது மூன்று இலைகளை ஒன்றாக இணைத்து அதனுள் இருந்து கொண்டு பச்சையத்தை சுரண்டி உண்பதால், வயலில் ஆங்காங்கே தீயினால் எரிந்தது போல் காணப்படும். புகையிலை வெட்டுப்புழு தொடர்ச்சியாக இலையை உண்டு சேதப்படுத்தும். இலை பரப்பு முழுவதும் உண்டு இலையின் நரம்புகள் மட்டும் செடியில் மீதமிருக்கும். இவைகளை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை சாறு 5 சதவீதம் அல்லது வேப்ப எண்ணெய் 3 சதவீதம் தெளித்து கட்டுப்படுத்தலாம். அல்லது ஏக்கருக்கு 2 இனக்கவர்ச்சி பொறியினை வைத்து ஆண் அந்து பூச்சியை கவர்ந்து கட்டுப்படுத்தலாம். ஏக்கருக்கு ரசாயன மருந்தான தையோடைகார்ப் 250400 கிராம் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிப்ப தால் புழுக்களை அழிக்க லாம். மேற்கூறிய உத்திகளை கையாண்டு விவசாயிகள் நிலக்கடலை பயிரை பாதுகாத்துக்கொள்ளலாம். இந்த தகவலை திருவண்ணாமலை மாவட்டம்

கீழ்நெல்லி வேதபுரி வேளா ண்மை அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து தெரிவித்துள்ளார்.

**<u>அரளிப்பூ உற்பத்தியை அதிகரித்து விற்பனையை பெருக்க கூட்டம்</u>**

சேலம், : சேலத்தில் அரளிப்பூ உற்பத்தியை அதிகரித்து மொத்த விற்பனையை பெருக்குவதற்கான ஆலோசனைக்கூட்டம் நடந்தது. சேலம் மாவட்டத்தில் பனமரத்துப்பட்டி, அயோத்தியாப்பட்டணம், வாழப்பாடி பகுதிகளில் சுமார் 15ஆயிரம் ஹெக் டாரில் அரளிப்பூ பயிரிடப்படுகிறது. 5ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் அரளி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். நாள் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 10டன் அரளிப்பூக்கள், சேலத்திலிருந்து வெளிமார்க்கெட்டுக்கு செல்கிறது. ஆனால் இங்குள்ள விவசாயிகளிடம் போதிய விழிப்புணர்வு இல்லாததால் அரளி வர்த்தகம் சுருங்கியுள்ளது. இதை சீரமைக்கும் வகையில் நபார்டு வங்கி வழிகாட்டுதல் படி தேசிய ஒருங்கிணைந்த நலன் மற்றும் வளர்ச்சி அறக்கட்டளை (நிவாட்) சார்பில் ‘அரளிப்பூ உற்பத்தியாளர் கூட்டமைப்பு’ சேலத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டமைப்பின் ஆலோசனைக் கூட்டம் சேலத்தை அடுத்த நிலவாரப்பட்டியில் நடந்தது. இதில் நூறுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். நிவாட் அமைப்பை சேர்ந்த பிரபுராஜ் வரவேற்றார். மேலாண்மை இயக்குநர் செல்வராணி அரளிப்பூ உற்பத்தியாளர் கூட்டமைப்பின் செயல்பாடுகள் குறித்து பேசினார். இது குறித்து அவர் கூறுகையில், ‘அரளிப்பூவை அதிகளவில் உற்பத்தி செய்வதற்கான வழிமுறைகள், அதற்கான தொழில்நுட்பங்கள், அதனை மொத்தவிற்பனை செய்வதற்கான மற்றும் வங்கிக்கடன் பெறுவது குறித்து கூட்டத்தில் விளக்கம் அளிக்கப்பட்டது’ என்றார். கூட்டத்தில் இந்தியன் வங்கி மேலாளர் ரவிச்சந்திரன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் கண்ணன், நிதிசார் கல்வி மற்றும் கடன் ஆலோ சனை மைய ஆலோசகர் பழனிவேல்ராஜன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**<u>உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனையாளர் சிறப்பு கூட்டம்</u>**

கிருஷ்ணகிரி,: கிருஷ்ணகிரி மாவட்ட அளவிலான உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனையாளர்களுக்கான சிறப்பு ஆலோசனை கூட்டம் நடந்தது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 10 ஒன்றியங்களின் உரம் மற்றும் பூச்சிகொல்லி மருந்து விற்பனையாளர்களுக்கு சிறப்பு தொழில்நுட்பம் மற்றும் ஆலோசனை கூட்டம் கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் நடந்தது. வேளாண்மை துறை மூலம் நடந்த இந்த கூட்டத்திற்கு வேளாண்மை இணை இயக்குனர் மணி தலைமை வகித்தார். கூட்டத்தில், அனைத்து தனியார் உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனையாளர்களுக்கு உரக்கட்டுப்பாடு சட்டம், பூச்சி மருந்து சட்டம் மற்றும் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. மேலும், இதில், சிறப்பு தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது. கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் பேசியதாவது: விவசாயிகளுக்கு எளிதில் புரியும்படி கடையின் விவரம் கொண்ட பலகை வைக்க வேண்டும். விலை பட்டியல் கடைக்கு முன்பு வைக்கப்பட வேண்டும். விற்பனை ரசீது செல்போன் எண் உள்பட முழு முகவரியுடன் வழங்க வேண்டும். இருப்புப்பதிவேடு பராமரிக்க வேண்டும். உரங்கள் பெற்றதற்கான ரசீது பராமரிக்கப்பட வேண்டும். பூச்சி நோய் மருந்துகளுக்கு தனியாக இருப்புப்பதிவேடு, ரசீது வழங்குதல், விற்பனை விலை விவரம் அனைத்தும் பராமரிக்க வேண்டும். உரிமம் பெற்று விற்பனை செய்யப்பட வேண்டும். காலாவதியான பூச்சி, பூஞ்சாணை நோய் மருந்துகளை விற்பனை செய்யக்கூடாது. வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் வேளாண்மை அலுவலர்களை அணுகி மேலும் விவரங்களை பெற்று, தரமான பூச்சி மருந்துகளை மட்டும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய வேண்டும். வெளிமாநிலங்களுக்கு உரங்கள் விற்பனை செய்ய கூடாது. அவ்வாறு மீறினால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார். இந்த கூட்டத்தில், வேளாண்மை உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பா) பச்சையப்பன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## வேளாண் மாணவிகள் பணி அனுபவ துவக்க விழா

கொள்ளிடம், : நாகை மாவட்டம் கொள்ளிடம் அருகே சாமியம் கிராமத்தில், அண்ணாமலை பல்கலைக்கழக மாணவிகளின் வேளாண் பணி அனுபவ துவக்க விழா நடைபெற்றது. தாழ்குழலி வரவேற்றார். விவசாயிகள் முனிபாலன், மோகன், ரவிச்சந்திரன், ராஜேந்திரன் முன்னிலை வகித்தனர். ஊர் நாட்டாண்மை

வெங்கடேசன் வாழ்த்தி பேசினார். ஊராட்சி மன்ற தலைவர் பாரிவள்ளல் பேசுகையில், நமது டெல்டா பகுதியில் முப்போகம் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. தற்போது ஒரு போகம் ஆகிவிட்டது. அதுவும், வாய்க்கால்களை ஒட்டியுள்ள நிலங்களில் மட்டுமே நெற்பயிர் சாகுபடி செய்யமுடியும் என்ற நிலை உருவாகிவிட்டது. இதற்கு காரணம் தண்ணீர் பற்றாக்குறையே. நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி விவசாயம் செய்தால், லாபம் ஈட்ட முடியும். செம்மை நெல்சாகுபடி முறையில் விதைப்பு செய்தால், சாதாரண விதைப்பு செலவைவிட, பாதி செலவே ஆகிறது. எனவே மாணவிகள் நவீன விவசாயம் செய்வது எப்படி என்பதை, இப்பகுதி விவசாயிகளுக்கு அறிவுறுத்த வேண்டும் என்றார். விழாவில் விவசாயிகள், மகளிர் சுயஉதவிக்குழுவினர், மற்றும் ஊராட்சிமன்ற உறுப்பினர்கள், வேளாண் மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் மாணவி திரேகபிரியா நன்றி கூறினார்.

**<u>வாழை விவசாயிகளுக்கு தொழில்நுட்பக் கல்லூரி மாணவிகள் பயிற்சி</u>**

சின்னமனூர், : சின்னமனூர் அருகே, வாழையில் உரப்பயன்பாடு குறித்து, விவசாயிகளுக்கு மாணவிகள் பயிற்சி அளித்தனர். சின்னமனூர் அருகே, குச்சனூரில், நோயிலிருந்து பயிரை காப்பாற்றவும், அதிக மகசூல் எடுக்கும் தொழில் நுட்ப பயிற்சி குறித்து குள்ளப்புரம் வேளாண் தொழில் நுட்பக் கல்லூரி மாணவிகள் பயிற்சி அளித்தனர். வாழையில் நுண்ணூட்ட ஸ்பெஷல் பயன்கள் மற்றும் உபயோகிக்கும் முறையால் குறைந்த உரப்பயன்பாடு, நல்ல பயிர்வளர்ச்சி பெரிய தரமான வாழை குலை கிடைப்பது குறித்து நோய்களை கட்டுபடுத்திடும் செயல் முறை விளக்கம் காண்பித்து பயிற்சி அளித்தனர். காமாட்சிபுரம் சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையம் திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து பல்வேறு விவசாய தொழில்நுட்பம் குறித்து விளக்கமளித்தார். மாணவிகள் அபிராமி, கவிநயா, சிவசங்கரி, தவியாசன்னி, ஆதிரா, லோகப்பிரியா,சுஷ்மிதா, இந்துமதி மற்றும் விவசாயிகள் ஏராளமானோர்கள் கலந்து கொண்டனர்.

**<u>குமரி மாவட்டத்தில் வேளாண்மை துறை பணிகள் கலெக்டர் ஆய்வு</u>**

நாகர்கோவில், : குமரி மாவட்டத்தில் வேளா ண்மை துறை மற்றும் அதனை சார்ந்த இதர துறைகளின் பணிகளை நேற்று கலெக்டர் ஆய்வு செய்தார். எறும்புக்காடு பகுதியில் விவசாயி மீனாட்சிசுந்தரம் என்பவரது தோட்டத் தில் ஊடுபயிராக மக்காச்சோளம் பயிரிடப்பட்டதை பார்வை யிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும் திசு வாழைக்கன்றுகள் நடவு முறையை அத்தோட்டத் தில் தொடங்கி வைத்தார். மேலும் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் அக்கிராமத்தில் அனுபவ பயிற்சி பெறும் வகையில் ஈடுபட்டிருந்த கிள்ளிகுளம் விவசாய கல்லூரி மாணவி களை பல தொழில்நுட்பங்களை தெரிந்துகொள்ள அறிவுறுத்தினார். எறும்புக் காடு பகுதியில் உள்ள மண் புழு உரக்கூடத்தையும், நாட்டுக் கோழி வளர்ப்பில் கருங் கோழி வளர்ப்பு, போர்க் கோழி வளர்ப்பு போன்றவைகளையும் கேட்டறிந் தார். பின்னர் மாவட்டத்தில் முதல்முறையாக சூரப்பள்ளம் பகுதியில் அமைக்கப்பட்ட சூரிய ஒளி பம்ப் செட் திடலை பார்வையிட்டார். இதற்காக யூனிட் ஒன்றுக்கு ரூ 3 லட்சத்து நான்காயிரம் அரசு மானிய மாக வழங்கப்பட்டுள்ளது எனவும், ரூ 90 ஆயிரம் விவசாயி பங்கில் செலுத்தப்பட்டது என்ற விபரம் வேளாண்மை பொறியியல் துறை வாயிலாக தெரிவிக்கப்பட்டது. இந்த பம்ப்செட் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இயங்கும் தன்மை கொண்டது. மின்சாரம் இல்லாத இடங்களில் இந்த பம்ப்செட் மூலம் நீர்பாய்ச்சுவதற்கு மிகவும் வசதியாக இது அமையும் என மாவட்ட கலெக்டருக்கு தெரிவிக்கப்பட்டது. இதனால் டீசல் அல்லது மின்சார செலவு கணிசமான அளவில் மிஞ்சும் என விவசாயி தெரிவித்தார். பின்னர் புதுமடம் கிராமத்திற்கு சென்ற கலெக்டர் அங்கு வாடல் நோயினால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை யும், அப்புறப்படுத்தப்பட்ட மரங்களையும் பார்வையிட்டார். மேலும் வாடல் நோய் தாக்கிய மரங்களை கவனமாக கண்டறிந்து அதனை மேலும் பரவாமல் தடுக்க உடனடியாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார். பின்னர் பெருஞ்செல்வவிளையில் திருந்தியநெல் சாகுபடி, அனந்தனார் சானல் சீரமைப்பு பணிகள், பறக்கை கால்நடை மருந்தகத்தில் மருத்துவ பணிகள், மீன்வள ஆராய்ச்சி மையத்தில் பணி கள் போன்றவற்றை ஆய்வு செய்தார்.

இணை வேளா ண்மை இயக்குநர் (பொறுப்பு) பொன் காத்த பெருமாள்,

கலெக்டரின் நேர் முக உதவியாளர் போஸ்லின் வின்ஸ்டன் சாம், உட்பட அதிகாரிகள் உடனிருந்தனர்.

**துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வேளாண் அதிகாரி தகவல்**

நாமக்கல், : துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இது குறித்து, கபிலர்மலை வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜ் வெளியிட்டுள்ள செய்தி: புதிய தொழில் நுட்பத்தின் அடிப்படையில், துவரை விதையை முதலில் பாலித்தீன் பையில் இட்டு, நாற்று விட்டு, பின் எடுத்து நடவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நீர்பாசனம் செய்து தனிப்பயிராகி, ஒரு ஹெக்டர் பரப்பில் இம்முறையை கையாண்டு செயல் விளக்கம் அமைக்கும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, ரூ 7,500 மதிப்பில் சாகுபடிக்கான அனைத்து இடுபொருட்களும், 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படும்.

அதே போல், துவரை சாகுபடிக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தில், ஒரு விவசாயி தான் சொந்த செலவில் அனைத்து தொழில் நுட்பங்களையும் கடைபிடித்து, ஒரு ஹெக்டர் பரப்பில் துவரை சாகுபடி செய்தால், பின் மானியமாக, ரூ 7,500 விவசாயியின் வங்கி கணக்கில் நேரடியாகவோ அல்லது காசோலையாகவோ வழங்கப்படும். செயல் விளக்கத்துக்கு, 15 ஹெக்டரும், ஊக்கத்தொகைக்கு, 30 ஹெக்டரும் இலக்கு பெறப்பட்டுள்ளது.

ஆர்வம் உள்ள விவசாயிகள், வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டும். இத்திட்டத்துக்கான விதைகள் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

**மாட்டு சந்தையில் வெளி மாநில வியாபாரிகள் வருகையால் 90 சதவீத மாடுகள் விற்பனை**

ஈரோடு, :வெளி மாநில வியாபாரிகளின் வருகையால் ஈரோடு மாட்டு சந்தையில் மாடுகளின் விற்பனை அதிகரித்தது. இதனால் 90 சதவீத மாடுகள்

விற்பனையானது. ஈரோடு கருங்கல்பாளையம் காவிரி செக்போஸ்ட் பகுதியில் மாட்டு சந்தை செயல்பட்டு வருகிறது. வாரந்தோறும் வியாழக்கிழமை நடைபெறும் இந்த மாட்டு சந்தைக்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் மாடுகளை விற்பனை செய்ய கொண்டு வருகிறார்கள். அதன்படி நேற்று காலை தொடங்கிய மாட்டு சந்தைக்கு ஏராளமான மாடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது. இதில், 500 பசு மாடுகளும், 400 எருமை மாடுகளும் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது. இதில், பசு மாடுகள் ரூ.16 ஆயிரம் முதல் ரூ.33 ஆயிரம் வரையிலும், எருமை மாடுகள் ரூ.18 ஆயிரம் முதல் ரூ.34 ஆயிரம் வரை யிலும் இருந்தது. நேற்று நடந்த மாட்டு சந்தைக்கு வெளி மாநிலங்களை சேர்ந்த வியாபாரிகள் அதிக அளவில் வந்திருந்தனர். குறிப்பாக ஆந்திரா, கர்நா டகா, கேரளா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் மாடுகளை அதிகமாக வாங்கி சென் றனர். இதனால் மாடுகளின் விற்பனை 90 சதவீதமாக இருந்தது. இது குறித்து வியாபாரிகள் கூறுகையில், ‘இந்த மாட்டு சந்தையில் தற்போது மாடுகளுக்கு நல்ல விலை கிடைத்து வருவதால் விவசாயிகள் அதிக அளவில் மாடுகளை கொண்டு வந்தனர். மாடுகளை வாங்கி செல்வதற்காக மகாராஷ்டிராவில் இருந்து அதிகமாக வியாபாரிகள் வந்ததால் மாடுகளின் விற்பனை அதிகாலையிலேயே 90 சதவீதம் விற்பனையாகியுள்ளது. அடுத்த வாரம் அந்தியூர் குருநாதசுவாமி கோயில் திருவிழாவையொட்டி அங்கு மாட்டு சந்தை, குதிரை சந்தை நடைபெறவுள்ள நிலையில், அடுத்த வாரம் விற்பனை குறைவாகவே இருக்கும். இதனால் வியாபாரிகள் அதிகமாக வந்து மாடுகளை வாங்கி சென்றுள்ளனர்’ என்றனர்.

## தஞ்சை மாவட்டத்தில் இருமடங்கு மகசூல் பெற திருந்திய நெல் சாகுபடி விவசாயிகளுக்கு யோசனை

சேதுபாவாசத்திரம், : நடப்பு சம்பா பருவத்தில் இருமடங்கு மகசூல் பெற திருந்திய நெல் சாகுபடி செய்யலாம் என்று விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வேளாண்மை உதவி இயக்குனர்

பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: நட ப்பு சம்பா பருவத்தில் திருந் திய நெல் சாகுபடி முறை யால் இரண்டு மடங்கு உற்பத்தி, மூன்று மடங்கு வருமானம் பெற சிறப்பு தொழில்நுட்பங் களை கையாளவேண் டும். அதாவது தரமான சான்று பெற்ற உயர் விளைச் சல் மற்றும் வீரிய ஒட்டு ரகங் களை பயன்படுத்த வேண் டும். எந்த ரக விதையானாலும் ஒரு ஏக்கருக்கு 2 கிலோ விதை மட்டுமே போதுமானது. 40 சதுர மீட்டர் பரப் பில் (1 சென்ட்) மேட்டுப்பாத்தி அமைத்து பாலித்தீன் விரிப்புகளை பரப்பி அதன் மீது விதைப்பு சட்டங்களை வைத்து மண் மற்றும் இயற்கை எருக்களை இட்டு விதைகளை விதைக்க வேண்டும். வயலை மிகவும் துல்லியமாக சமன் செய்ய வேண்டும். சதுர முறையில் நடவு செய்ய மார்க்கர் கருவி கொண்டு அடையாளமிட வேண்டும். சரியாக 10 - 14 நாள் வயதுடைய இரு இலை பருவமுடைய இளநாற்றுகளை நடவு செய்ய வேண்டும். ஒரு குத்துக்கு ஒரு நாற்று மட் டுமே வைத்து மேலாக நடவு செய்ய வேண்டும். 22.5 செ.மீ 22.5 செ.மீ இடைவெளி (முக்கால் அடி இடைவெளி) இருக்குமாறு நடவு செய்ய வேண் டும். நடவு செய்த 10ம் நாள் முதல் கோனோ வீடர் களை எடுக்கும் கருவி கொண்டு 10 நாள் இடைவெளியில் 3 அல்லது 4 முறை களையெடுக்க வேண் டும். பாய்ச் சலும் - காய்ச்சலுமாக நீர் பாசனம் செய்ய வேண்டும். 2லு செ.மீ.க்கு மேல் தண்ணீர் நிறுத்தக்கூடாது. இலை வண்ண அட் டையை பயன்படுத்தி தேவைக்கேற்ப தழைச்சத்தை மேலுரமாக பிரித்து இடவேண்டும். இவ்வாறு தொழில்நுட்பங்களை கடைபிடிக்கும் போது 1 ஏக்கரில் சராசரியாக 4000 கிலோ (ஒரு ஹெக்டேருக்கு 10,000 கிலோ) வரை மகசூல் பெற முடியும்.

## மானிய விலையில் வைக்கோல் அதிகாலையிலேயே குவிந்த விவசாயிகள்

மேலூர், : மானிய விலையில் வழங்கப்படும் வைக்கோலை அதிகாலை முதல் விவசாயிகள் காத்திருந்து பெற்று சென்றனர். பருவ மழை பொய்த்து விட்டதன் காரணமாக கால்நடைகளுக்கு தீவனத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் மதுரை மாவட்டத்தில் வறட்சி நிவாரண நிதியில் இருந்து விவசாயிகளுக்கு வைக்கோல் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டது. ஒரு டெப்போவிற்கு ரூ.10 லட்சம் வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இத்தொகையை கொண்டு

சுழற்சி முறையில் வைக்கோல் கொள்முதல் செய்யப்படுகிறது. மேலூர் ஒன்றியத்திற்கு வெள்ளலூரிலும், கொட்டாம்பட்டி ஒன்றியத்திற்கு கருங்காலக்குடியிலும் இந்த டெப்போ பிப்ரவரி மாதம் முதல் செயல்பட்டு வருகிறது. இங்கு ஒரு கிலோ வைக்கோல் ரூ.2க்கு வழங்கப்படுவதால் விவசாயிகள் நீண்ட நேரம் காத்திருந்து வாங்கி செல்கின்றனர். நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மண்டல இணை இயக்குநர் கோபிநாத், துணை இயக்குநர் (தீவன பெருக்கம்) ரவீந்திரன், கால்நடை உதவி இயக்குநர் டாக்டர் ராஜதிலகன், வாடிப்பட்டி வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மைய தலைவர் சந்தனத்துரை, துணை தலைவர் தங்கராஜ் கலந்து கொண்டனர்.

உதவி இயக்குநர் ராஜதிலகன் கூறுகையில், வறட்சியின் பாதிப்பு தற்போது அதிகம் உள்ளதால், கால்நடைகளுக்கு தீவனம் கிடைப்பது இல்லை. இதனால் கால்நடை வளர்போர் சிரமப்பட்டு வந்த நிலையில் அவர்களுக்கு உதவி செய்ய அரசு வைக்கோலை கிலோ ரூ.9.50க்கு கொள்முதல் செய்து மக்களுக்கு ரூ.2க்கு விற்பனை செய்கிறது. ஒரு மாட்டிற்கு தினசரி 3 கிலோ விதம், ஒரு வாரத்திற்கு தேவையான 21 கிலோ வைக்கோல் தரப்படுகிறது. ஏற்கனவே பதிந்துள்ள மேலூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட எந்த விவசாயியும் இதை பெற்றுக் கொள்ளலாம். கடந்த பிப்ரவரி மாதம் முதல் இதுவரை 1240 பயனாளிகளுக்கு 40,300 கிலோ வைக்கோல் கொடுக்கப்பட்டுள்ளது என்றார்.

## <u>சூரிய சக்தியால் இயங்கும் பம்ப்செட் அமைக்க அரசு 80 சதவீதம் மானியம்</u>

ராமநாதபுரம், : ராமநாதபுரம் மாவட்ட விவசாயி கள் சூரிய சக்தியால் இயங் கும் பம்ப்செட் அமைக்க அரசு 80 சதவீதம் மானியம் வழங்குகிறது என வேளா ண்மை இணை இயக்குநர் தெரிவித்துள்ளார. ராமநாதபுரம் மாவட்டத்தில் திறந்தவெளி கிணற்று பாசன வசதியுடைய விவசாயிகளுக்கு சூரிய சக்தியால் இயங்கும் 5 குதிரை திறன் கொண்ட ஏ.சி மோட்டார் பம்ப்செட் அமைப்பு தானியங்கி, சாய்மான வசதியுடன் கூடிய 4800 டபிள்யு.பி., திறனுடைய பம்புசெட்டுகள்

அமைக்க 80 சதவீதம் அரசு மானியம் வழங்கப்படுகிறது. சூரிய சக்தியால் இயங்கும் திறந்த கிணறு பம்ப்செட்டின் மொத்த விலை வரிகள் உள்பட ரூ.5 லட்சத்து ஆயிரத்து 512. இதில் 80 சதவீதம் மானியமாக ரூ.3.84 லட்சம். விவசாயிகள் செலுத்த வேண்டிய பங்குத்தொகை ரூ.1 லட்சத்து 17 ஆயிரத்து 712 ஆகும். பம்ப்செட் தேவைப்ப டும் விவசாயிகள் தங்கள் பகுதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களிடம் விண்ணப்பம் அளிக்கலாம். விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டதும், வேளாண்மை பொறியியல் துறை பொறியாளர்கள், பம்ப்செட் பொருத்தும் நிறுவனங்கள் மற்றும் விவசாயிகளுடன் இணைந்து பம்ப்செட்டுகளை பொருத்துவற்கான காரணிகளை ஆய்வு மேற்கொள்வர். அதன் அடிப்படையில் பம்ப்செட்டுகள் பொருத்தப்படும். ஆய்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படும் விவசாயி பங்களிப்புத் தொகையினை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் பெயரில் காசோலை மூலம் செலுத்த வேண்டும். சோலார் பம்ப்செட்டுகளை அமைக்கும் விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் அல்லது தெளிப்பு நீர்ப்பாசனம் போன்ற நுண்ணீர் பாசன வசதியும் அமைக்கப்படும். இதன் மூலம் பாசன நீர் சிக்கனமாக பயன்படுத்தப்படுவதுடன், எந்தவொரு தொடர் செலவினமும் இல்லாத பம்ப்செட் இயக்கும் சக்தி கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது. இதன் மூலம் விவசாயத்தில் மரபு சாரா எரிசக்தி பயன்பாடு ஊக்கப்படுத்தப்படுகிறது. எனவே விருப்பம் உள்ள விவசாயிகள் சோலார் பம்ப்செட் அமைக்க விண்ணப்பம் செய்யலாம் என வேளாண்மை இணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## குறைந்த வாடகையில் வேளாண் உபகரணங்கள் வேளாண் விற்பனைக்குழு அறிவிப்பு

நெல்லை,: குறைந்த விலையில் வேளாண் உபகரணங்கள் மற்றும் நவீன குளிர்பதன கிட்டங்கி வசதிகளை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேளாண் விற்பனை குழு அறிவுறுத்தி வருகிறது. இதுகுறித்து நெல்லை விற்பனைக்குழு செயலாளர் விஜயகுமார், மேலாளர் கண்ணன் ஆகியோர் விடுத்துள்ள செய்திகுறிப்பு: நெல்லை மாவட்டத்தில் ராமையன்பட்டி, வள்ளியூர், தூத்துக்குடி

மாவட்டத்தில் தூத்துக்குடி, சாத்தான்குளம் ஆகிய பகுதிகளில் ஒழுங்கு விற்பனை கூடங்களில் 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிட்டங்கிகளையும், விளாத்திக்குளத்தில் மிளகாய் வற்றல் சேமிக்க 100 மெட்ரிக் டன் குளிர்பதன கிட்டங்கியையும் தமிழக முதல்வர் விவசாயிகள் பயன்பெற திறந்து வைத்துள்ளார். விவசாயிகள் குறைந்த வாடகைக்கு இவற்றை பயன்படுத்தி கொள்ள லாம். ராமையன்பட்டி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நெல் கதிர் அறுவடை இயந்திரம், தென்காசி, அம்பை மற்றும் வள்ளியூர் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் பவர்டில்லர் மற்றும் ரோட்டோவேட்டர் ஆகிய வேளாண் உபகரணங்கள் குறைந்த வாடகைக்கு விவசாயிகள் பயன்பெறும் வகையில் வைக்கப்பட்டுள்ளன. தேவைப்படும் விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர்களை தொடர்பு கொண்டு வாடகைக்கு பெற்று கொள்ளலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

<u>**விவசாய வளர்ச்சிக்கு புதிய திட்டங்கள்; முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு**</u>

சென்னை, சட்டசபையில் நேற்று கேள்வி நேரம் முடிந்ததும் முதல்-அமைச்சர் ஜெயலலிதா110விதியின்கீழ்அறிவிப்புஒன்றைவெளியிட்டார்.அப்போது அவர் பேசியதாவது:- அம்மா பண்ணை மகளிர் திறன் மேம்பாட்டுத் திட்டம் நாட்டின் முதன்மைத்தொழிலாகவும், ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாகவும், கிராமப்புற மக்களின் வாழ்வுக்கு ஆதாரமாகவும் விளங்குகின்ற வேளாண் தொழிலை மேம்படுத்தும் வகையில், கீழ்க்காணும் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. இடு பொருட்கள் உற்பத்தி உள்ளிட்ட விவசாயப்பணிகள் மற்றும் அறுவடைக்கு

பிந்தைய செயல்பாடுகள் ஆகியவற்றில் மகளிருக்கு பயிற்சி வழங்கும் "அம்மா பண்ணை மகளிர் திறன் மேம்பாட்டுத் திட்டம்" 113 கோடியே 26 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத்திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில் 770 "பண்ணை மகளிர் குழுக்கள்" அமைத்து, உரிய கடன் வசதி மற்றும் சுழல் நிதி வழங்கப்படும். அம்மா சேவை மையம் 2. தமிழக விவசாயிகள் சான்று பெற்ற விதைகளை அதிகளவில் உபயோகிப்பதை ஊக்குவிக்கும் வகையில், அரசு விதைப் பண்ணைகள், விதை உற்பத்தி செய்யும் நிலையங்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோரை ஒருங்கிணைத்து, உரிய பணியாளர்களை நியமித்து, 156 கோடியே 74 லட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை ஒன்று ஏற்படுத்தப்படும். இங்கு உற்பத்தி செய்யப்படும் தரமான, சான்று பெற்ற விதைகள் "அம்மா விதை" என்ற பெயரில் "அம்மா சேவை மையம்" விற்பனை வாயில்கள் மூலம் நியாயமான விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். 3. புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை, தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் வாழவச்சனூர் ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் மூன்று வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் 150 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.விவசாயிகளுக்கு பரிசு 4. தமிழ்நாட்டில் உணவு தானிய உற்பத்தியை மேலும் பெருக்கும் வகையில், 16 கோடியே 9 லட்சம் ரூபாய் செலவில், "விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை" செயல்படுத்தப்படும். இந்தத்திட்டத்தின்படி, 'விவசாய உற்பத்தியாளர் குழுக்கள்' அமைக்கப்படும். மேலும், "பண்ணை பயிர் மேலாண்மைத் திட்டம்" என்னும் தகவல் தொழில் நுட்பம், தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கும் நீட்டிக்கப்படும். தகவல் தொழில்நுட்பத்துடன் கூடிய அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மைத் திட்டத்துடன் பண்ணைப் பயிர் மேலாண்மைத் திட்டமும் இணைக்கப்படும். மேலும், உற்பத்தியாளர் குழுக்களுக்கு லாபகரமான விலை கிடைக்க இக்குழுக்களை இணைத்து ஒன்பது விவசாய

உற்பத்தியாளர் அமைப்புகள் உருவாக்கப்படும். இவையன்றி, மாவட்ட அளவிலான வேளாண் விரிவாக்க அலுவலர்களையும் ஊக்குவிக்கும் வகையில், சாதனை புரியும் விவசாயிகளுக்கும், சிறந்த முறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கும்மாவட்டஅளவில்பரிசுகள்வழங்கப்படும். ரூ.126 கோடியில் பழுது நீக்கும் சேவை மையங்கள் 5. கருத்துக்காட்சி, விவசாயிகள் பயிற்சி அறை, இடுபொருள் இருப்பு வைத்து விநியோகிக்கும் வசதியுடன் கூடிய ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் 50 வட்டாரங்களில் 75 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். 6. சாகுபடி செய்யப்படும் முக்கிய பயிர்களுக்குத் தேவையான அனைத்து வகையான வேளாண் கருவிகள் மற்றும் வேளாண் எந்திரங்கள் விவசாயிகளுக்கு நியாயமான வாடகைக்கு வழங்கவும், இந்த எந்திரங்களை பழுது நீக்கவும் பொது மற்றும் தனியார் பங்கேற்புடன் 385 வட்டாரங்களிலும் 'வேளாண் எந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் மற்றும் எந்திரங்கள், பழுது நீக்கும் சேவை மையங்கள்' 126கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.வேளாண் பதப்படுத்தும் மாதிரி தொழிற்சாலை 7. அரியலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, பெரம்பலூர், ராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, திருவண்ணாமலை, விருதுநகர் மற்றும் சேலம் ஆகிய 10 மாவட்டங்களில், அம்மாவட்டத்திற்கு உகந்த வகையில் அரசு அல்லது பொது மற்றும் தனியார் துறை அல்லது கூட்டு நிறுவனங்கள் அல்லது உழவர் உற்பத்தியாளர் குழுக்கள், தனியார் தொழில் முனைவோர் மூலம் "வேளாண் பதப்படுத்தும் மாதிரி தொழிற்சாலை" 25 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு இதற்கு தேவையான வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படும். 8. பயறு உற்பத்தியில் தன்னிறைவு அடைய ஏதுவாக, சாகுபடி பரப்பினை உயர்த்த துவரைப் பயிர் சாகுபடி ஓர் இயக்கமாகச் செயல்படுத்தப்படும். துவரை பயறுக்கான இச்சிறப்புத் திட்டம் 55 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். பூச்சி மேலாண்மை மாதிரி கிராமம் 9. நடப்பு ஆண்டில் வேளாண் ஆராய்ச்சியின் மூலம் 28 கோடி ரூபாய் செலவில் 6 இடங்களில் மகத்துவ மையங்கள் உருவாக்கப்படும். இதன்படி, கோயம்புத்தூரில் மூலக்கூறு மரபியல்

மகத்துவ மையம் ஒன்றும்; செட்டிநாட்டில் மானாவாரி பண்ணைய மகத்துவ மையம் ஒன்றும்; திருச்சிராப்பள்ளியில், மண் வள மகத்துவ மையம் ஒன்றும், மதுரையில் புதுமை ஆய்வு மகத்துவ மையம் ஒன்றும், திருச்சிராப்பள்ளியில் பண்ணை மகளிர் அறிவு மேம்பாட்டு மையம் ஒன்றும், பட்டுக்கோட்டையில் எண்ணெய்ப் பனை மகத்துவ மையம் ஒன்றும் உருவாக்கப்படும். 10. சுற்றுச்சூழலுக்கு உகந்த, நீடித்த வேளாண் பணிகளை மேம்படுத்துவதற்காக வேலூர், ஈரோடு, தர்மபுரி, திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய ஐந்து மாவட்டங்களில், மாவட்டத்திற்கு ஒரு கிராமம் வீதம், கிராமம் ஒன்றுக்கு 10 லட்சம் ரூபாய் செலவில், 5 மாதிரி இயற்கைக் கிராமங்கள் உருவாக்கப்படுவதோடு, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையை வலுப்படுத்தும் நோக்கோடு 150 சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மாதிரி கிராமங்களும் அமைக்கப்படும். இதுவன்றி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயற்கை பண்ணைய பணிகளை தரப்படுத்தி இயற்கை பண்ணையத்தில் ஆராய்ச்சிப்பணிகளை மேற்கொள்வதற்கு ஆய்வக வளாகமும் 22 கோடியே 47 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். ஒரு வருட சான்றிதழ்படிப்பு 11. மனித வள ஆற்றலை அதிகரிக்கும் வகையில் வேளாண் திறன் மேம்பாட்டு மையம் ஒன்று துவக்கப்படும். இதன் மூலம் வரும் 10 ஆண்டுகளில் 20 கோடி ரூபாய் செலவில் 10 ஆயிரம் கிராமப்புற இளைஞர்களுக்கு 1 வருட சான்றிதழ் படிப்பு பயிற்றுவிக்கப்படும். 12. திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் மற்றும் நாயுடுமங்கலம் வட்டங்களில் தலா ஒன்றும், விழுப்புரம் மாவட்டம் திருநாவலூரில் ஒன்றும் என மொத்தம் மூன்று இடங்களில் புதிய ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் அமைக்கவும், நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யத்தில் இயங்கி வரும் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்கு புதிய கட்டிடம் கட்டவும் 2 கோடியே 38லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.100 சூரிய கூடார உலர்த்திகள் 13. சூரிய சக்தி பயன்பாட்டினை விவசாயிகள் மற்றும் விவசாய குழுக்கள் மேற்கொள்ள ஊக்குவிக்கும் வகையில், 50 விழுக்காடு மானியத்தில் சூரிய கூடார

உலர்த்திகள் படிப்படியாக நிறுவப்படும். முதல் கட்டமாக 2014-2015-ம் ஆண்டில் 4 கோடி ரூபாய் மதிப்பில் 100 சூரிய கூடார உலர்த்திகள் நிறுவப்பட்டு, வேளாண் பதப்படுத்துதல், மதிப்பு கூட்டுதல் மற்றும் விற்பனை வசதியுடன் உரிய முறையில் இணைக்கப்படும். இதற்காக கடன் வசதி தேவைப்படும் விவசாயிகளுக்கு கூட்டுறவு துறை மூலம் உரிய கடன் வழங்க ஆவன செய்யப்படும். மேற்காணும் நடவடிக்கைகள், விவசாய உற்பத்தியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கவும், விவசாயிகள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். இவ்வாறு முதல்-அமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

## நீர்வரத்து அதிகரிப்பு எதிரொலி: மேட்டூர் அணையின் நீர்மட்டம் 3 அடி அதிகரித்து 97 அடியாக உயர்வு



மேட்டூர், மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று மேலும் 3 அடி உயர்ந்து 97 அடியாக அதிகரித்துள்ளது. பருவமழை காலத்தில் ஏற்படும் வெள்ளப்பெருக்கை தடுக்கவும், மழைநீரை சேமித்து வைத்து குடிநீர் மற்றும் பாசன தேவைக்கு பயன்படுத்தவும் கடந்த 1934–ம் ஆண்டு மேட்டூர் அணை கட்டப்பட்டது.மேட்டூர் அணையில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12–ந்தேதி காவிரி டெல்டா

பாசனத்துக்கு தண்ணீர் திறப்பது வழக்கம். அணையின் நீர் இருப்பை பொறுத்து ஜூன் 12–ந்தேதிக்கு முன்னதாகவோ அல்லது காலதாமதமாகவோ தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. இந்த பாசனத்தின் மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு, திருச்சி, கரூர், தஞ்சாவூர், திருவாரூர், கடலூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை உள்பட 11 மாவட்டங்களில் 16 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது.
ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதம் வரை பெய்யும் தென் மேற்கு பருவமழை கடந்த 3 ஆண்டுகளாக கர்நாடகத்தில் மட்டும் தீவிரம் அடைந்தது. இதனால் கர்நாடக அணைகளில் இருந்து உபரி நீராக வெளியேற்றப்படும் தண்ணீர் மேட்டூர் அணையை வந்தடைந்த பிறகு தான் டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இந்த ஆண்டு ஜூன் 12–ந்தேதி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 44 அடியாக இருந்தது. இந்த நீர் இருப்பு டெல்டா பாசன தேவையை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருந்ததால் இந்த ஆண்டு இன்று வரை டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை.
இந்த நிலையில் கடந்த ஜூலை மாதம் முதல் கர்நாடகத்தில் தென்மேற்கு பருவ மழை தீவிரம் அடைந்து உள்ளது. எனவே அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர், ஹேமாவதி உள்பட முக்கிய அணைகள் அனைத்தும் நிரம்பும் தருவாயை எட்டி உள்ளன. இதன் காரணமாக இந்த அணைகளுக்கு வரும் நீர்வரத்து அப்படியே வெளியேற்றப்படுகிறது. இதையொட்டி மேட்டூர் அணைக்கு படிப்படியாக நீர்வரத்து அதிகரித்தது. இந்த நிலையில் நேற்று மேட்டூர் அணையின் நீர்மட்டம் 94.25 அடியாக உயர்ந்தது. இந்த நிலையில், இன்று காலை நிலவரப்படி மேலும் 3 அடி உயர்ந்து அணையின் நீர்மட்டம் 97.14 அடியாக உள்ளது. அணைக்கு வரும் நீரின் அளவு 22,120 கன அடியில் இருந்து 41,806 கன அடியாக உயர்ந்துள்ளது. அணையில் 61.23 டிஎம். சி நீர் இருப்பு உள்ள் நிலையில், 800 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. டெல்டா பாசன விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று வருகிற 15–ந்தேதி மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்க முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

## காவிரியில் வெள்ளப்பெருக்கு ஒகேனக்கல்லில் அனைத்து அருவிகளும் தண்ணீரில் மூழ்கின



கர்நாடக அணைகளில் இருந்து திறந்துவிடப்பட்ட 80 ஆயிரம் கனஅடி தண்ணீர் ஒகேனக்கல்லை வந்தடைந்தது. இதனால் காவிரி ஆற்றில் மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கு

கர்நாடக மாநிலத்தில் பருவமழை மேலும் தீவிரம் அடைந்து பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள கிருஷ்ணராஜசாகர், கபினி அணைகளுக்கு தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்தது. இதனையடுத்து இந்த 2 அணைகளும் முழு கொள்ளளவை எட்டியது. கபினி அணையில் இருந்து 50 ஆயிரம் கனஅடியும், கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து 30 ஆயிரம் கன அடி தண்ணீரும் வெளியேற்றப்பட்டு வருகிறது. மொத்தம் 80 ஆயிரம் கனஅடி தண்ணீர் காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் காவிரி ஆற்றில் மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

எச்சரிக்கை

ஒகேனக்கல்லில் மெயின் அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ் ஆகிய அருவிகள் அனைத்தும் தண்ணீரில் மூழ்கி வெள்ளக்காடாய் காட்சி அளித்தன. ஒகேனக்கல் அருவிக்கு செல்லும் நடைபாதைக்கு மேல் தண்ணீர் கரை புரண்டு ஓடுகிறது. இதனால் போலீசார் நடைபாதைக்கு செல்லும் வழியில் தடுப்பு அமைத்து தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். ஆற்றில் வெள்ளப்பெருக்கு

ஏற்பட்டுள்ளதால் காவிரி ஆற்றங்கரையோரம் வசிக்கும் பொதுமக்கள் தங்களது உடமைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு கலெக்டர் விவேகானந்தன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தண்டோரா அறிவிப்பு

மேலும் வெள்ளப்பெருக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு வருவாய்த்துறையினருக்கு கலெக்டர் அறிவுறுத்தி உள்ளார். கிராம

உதவியாளர்கள் ஆங்காங்கே தண்டோரா போட்டும், ஒலி பெருக்கி மூலமும் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்

**மேட்டூர் அணையின் உபரிநீர் ஏரிகளுக்கு கொண்டு வரப்படுமா**



அந்தியூர், மேட்டூர் அணையின் உபரிநீர் ஏரிகளுக்கு கொண்டு வரப்படுமா? என்று அந்தியூர் பகுதி விவசாயிகள் எதிர்பார்த்து உள்ளனர்.ஏரிகள் வறண்டு விட்டது

ஈரோடு மாவட்டம், அந்தியூர் பகுதியில் விவசாயமே முக்கிய தொழிலாக உள்ளது.

இந்த பகுதியில் உள்ள விவசாயிகள் கரும்பு, வாழை, எள், நிலக்கடலை, பருத்தி,

மரவள்ளிக்கிழங்கு, மக்காச்சோளம் போன்ற பயிர்களை சாகுபடி செய்துள்ளனர். விவசாய நிலங்களில் விளையும் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக விவசாயிகள் அரசு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விற்று வருகின்றனர். கிணற்று பாசனம் மற்றும் ஆழ்துளை பாசனத்தை நம்பியே விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாகவே அந்தியூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் சரியான மழை இல்லாததால் அந்தியூர் வறட்டுப்பள்ளம் அணையின் நீர்மட்டம் குறைந்து விட்டது. இதனால் அணையின்

நீர் ஆதாரத்தை நம்பி இருக்கும் கெட்டிசமுத்திரம், அந்தியூர் பெரிய ஏரி,

சந்தியாபாளையம் ஏரி, வேம்பத்தி ஏரி, ஆப்பக்கூடல் ஏரி ஆகியவை நீரின்றி

வறண்டு விட்டது. விவசாயிகள் அவதி இதனால் அந்தியூரை சுற்றியுள்ள கிணறுகளின் நீர்மட்டம் மிகவும் குறைந்து விட்டது. வாடி வரும் விவசாய பயிர்களை காப்பாற்ற விவசாயிகள் ஆழ்துளை கிணற்று பாசனத்தை பயன்படுத்த தொடங்கி உள்ளனர். ஆனால் ஆயிரம் அடிவரை போட்டாலும் ஆழ்துளை கிணறுகளில் குறைந்த அளவு நீரே கிடைக்கிறது. அதனால் விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமல் மிகவும் அவதிப்பட்டு வருகின்றனர்.

இது குறித்து விவசாயிகள் சிலர் கூறும்போது, "அந்தியூர் மற்றும் சுற்றுவட்டார பகுதி விவசாயிகளின் கனவு திட்டமான மேட்டூர் அணை தற்போது நிரம்பி வருகிறது. அந்த அணையின் உபரிநீர் வீணாக கடலில் கலப்பதை தேக்கி வைத்து, அந்தியூர் பகுதியில் உள்ள ஏரிகளுக்கு கொண்டுவரவேண்டும். இதனால் அந்தியூர், சென்னம்பட்டி, வெள்ளித்திருப்பூர், பட்லூர், எண்ணமங்கலம், சந்தியபாளையம், கெட்டிசமுத்திரம் உட்பட 20-க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள சுமார் 20 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலான விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும். தற்போது அந்தியூரை சுற்றியுள்ள பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை நிலவி வருகிறது. எனவே அந்தியூர் மற்றும் சுற்று வட்டார பகுதியில் உள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் வாழ்வாதாரம் உயர அதிகாரிகள் மேட்டூர் அணையின் உபரிநீரை அந்தியூர் பகுதிக்கு கால்வாய்கள் அமைத்து கொண்டுவர வேண்டும் என்பதே எங்களின் நீண்டகால கோரிக்கை ஆகும்" என்றனர்.

**குமரி மாவட்டத்தில், முதல்முறையாக சூரிய ஒளியில் இயங்கும் பம்புசெட் கலெக்டர் நாகராஜன் ஆய்வு**



குமரி மாவட்டத்தில் முதல்முறையாக சூரிய ஒளியில் இயங்கும் பம்புசெட்டை கலெக்டர் நாகராஜன் நேரில் சென்று ஆய்வு செய்தார்.கலெக்டர் நாகராஜன் ஆய்வு

குமரி மாவட்ட கலெக்டர் நாகராஜன் வேளாண்மைத்துறை மற்றும் அதைச்சார்ந்த இதர துறைகளின் பணிகளை ஆய்வு செய்தார். அப்போது எறும்புக்காடு பகுதியில் முன்னோடி விவசாயியான மீனாட்சிசுந்தரம் தோட்டத்தில் ஊடுபயிராக மக்காச்சோளம் பயிரிடப்பட்டுள்ளதை பார்வையிட்டார். பின்னர் திசு வாழைக்கன்றுகள் நடவு முறையை அதே தோட்டத்தில் தொடங்கி வைத்தார். சூரியஒளி பம்புசெட் பின்னர் குமரி மாவட்டத்தில் முதல்முறையாக சூரப்பள்ளம் பகுதியில் அமைக்கப்பட்ட சூரியஒளி பம்புசெட் திடலினை பார்வையிட்டார். இதற்காக யூனிட் ஒன்றுக்கு ரூ.3 லட்சத்து 4 ஆயிரம் அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது எனவும், ரூ.90 ஆயிரம் விவசாயியின் பங்குத்தொகையில் பெறப்பட்டது என்ற விவரம் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் தெரிவிக்கப்பட்டது. இந்த பம்புசெட் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இயங்கும் தன்மை கொண்டது. மின்சாரம் இல்லாத இடங்களில் இந்த பம்புசெட் மூலம் நீர் பாய்ச்சுவதற்கு மிகவும் வசதியாக இது அமையும். இதனால் டீசல் அல்லது மின்சார செலவு கணிசமான அளவில் மிஞ்சும் என விவசாயி தெரிவித்தார்.

உத்தரவு

அதையடுத்து பெருஞ்செல்வவிளை கிராமத்தில் சுமார் 80 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ள திருந்திய நெல் சாகுபடி பயிரை பார்வையிட்டார். இதில் சுமார் 40 எக்டேர் இயந்திர நடவினால் நடவு செய்யப்பட்டுள்ளது என வேளாண்மைத்துறையினால் தெரிவிக்கப்பட்டது. மேலும் அதிக அளவில் இயந்திர நடவு செய்ய விவசாயிகளை ஊக்குவிக்குமாறு அதிகாரிகளுக்கு கலெக்டர்உத்தரவிட்டார். பறக்கையில் அமைந்துள்ள மீன்வள ஆராய்ச்சி மையத்தை கலெக்டர் பார்வையிட்டார். மேலும் புதிய அலங்கார மீன்கள் உற்பத்தியை அதிக அளவில் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை கூறினார்.

அதிகாரிகள் ஆய்வின்போது வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) பொன்காத்தபெருமாள், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் போஸ்லின் வின்ஸ்டன் சாம், வேளாண்மை உதவி இயக்குநர் வாணி, வேளாண்மை பொறியியல்துறை செயற்பொறியாளர் ஆனந்தராஜா, பொதுப்பணித்துறை

செயற்பொறியாளர் சுப்பிரமணியம், உதவிப்பொறியாளர் இராதாகிருஷ்ணன், உதவி வேளாண்மை அதிகாரி ராஜேஷ், சதீஷ் சசிகலா, கிள்ளிகுளம் விவசாய கல்லூரி மாணவிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

**<u>மண் புழு உரம் தயாரித்து இயற்கை விவசாயம் மூலம் நல்ல மகசூல் பெற வேண்டும் கலெக்டர் பேச்சு</u>**



மண் புழு உரம் தயாரித்து இயற்கை விவசாயம் மூலம் நல்ல மகசூல் பெற வேண்டும் என்று கலெக் டர் ஜெயந்தி கூறினார்.

பயிற்சி

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், மருதூர் முதல்நிலை பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் திடக்கழிவு மூலம் மண்புழு உரம் தயாரிக்கும் பயிற்சி தொடக்க விழா நடைபெற்றது. விழாவிற்கு கலெக்டர் ஜெயந்தி தலைமை தாங்கி பயிற்சியை தொடங்கி வைத்து பேசி னார்.

அப்போது அவர் கூறிய தாவது:–

ஊராட்சிப்பகுதிகளில் சேரும் குப்பைகளை ஒருங்கிணைத்து திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் மக்கும் பொருளாக மாற்றி அதன் மூலம் மண்புழு உரங்கள் தயாரிக்கப்பட்டு விவ சாயத்திற்கு பயன்படுத்து வதன் மூலம் பயிறு வகை களின் உற்பத்தித்திறன் அதிகரிக்கின்றன. மேலும் குப்பைகளை அகற்றுவதன் மூலம் ஊராட்சிப் பகுதிகளும் தூய்மையடைகின்றன. இயற்கை முறை விவசாயம் அதற்காக அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்து வழங்கி வருகிறது. கரூர் மாவட்டத்திற்குட்பட்ட 11 பேரூராட்சித் தலைவர்களும் இப்பயிற்சியில் கலந்து கொள் வதன் மூலம் இதன் முக்கியத் துவம் பற்றி தெரிந்து கொண்ட துடன்,

இதேபோல் தங்கள் பேரூராட்சியிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் மண்புழு உரம் தயாரித்து இயற்கை முறை விவசாயம் மூலம் நல்ல மகசூல் பெற வேண்டும். மேலும் அனைத்து பேரூ ராட்சிகளிலும் பிளாஸ் டிக் பொருட்கள் பயன்படுத்து வதை தடை செய்ய வேண் டும். அதற்கேற்ப பொதுமக்க ளுக்குத் தேவையான விழிப் புணர்வை பேரூராட்சி துறை மூலம் அவ்வப்போது ஏற்படுத்த வேண்டும். பொதுவாக மக்கள் வசிக்கும் தெருக்களில் தேங்கும் குப்பைகளை உடனுக் குடன் அகற்றி அதை மண் புழு உரம் தயாரிக்க பணிகள் மேற் கொள்ளும் போது ஊரகப் பகுதியும் தூய்மையடைவது டன் முழுமையான சுகாதாரம் பாதுகாக்கப்படுகிறது.

பயிற்சி திறன்

இதுபோன்ற திடக் கழிவுகள் மூலம் கியாஸ் தயாரித்து விற்பனை செய்யும் போது அதன் தேவைகள் அதிகஅளவு பூர்த்தி செய்வதுடன் பேரூ ராட்சிகளின் பொருளாதார வளர்ச்சியும் அதிகரிக்கும். தற்போது தயாரிக்கும் மண்புழு உரம் மண்வளத் தை அதிகரிக்கச் செய்வதுடன் இயற்கை முறையில் பயிர் வகை கள் வளர்வதுடன் மகசூ லும் அதிகரிக்கின்றது. பயிர் களில் பூச்சிகொல்லி தாக்குதல் முற்றிலும் தவிர்க்கப்படுகின்றது. எனவே இதே போன்று மாவட்டத்திலுள்ள அனைத்து பேரூராட்சி களிலும், ஊராட்சிகளிலும் திடக்கழிவு மூலம் வேளாண் உற்பத்தி பொருட்கள் மட்டுமின்றி கியாஸ் தயாரிக்கும் நிலைக்கு உயர்வதுடன் நாம் வசிக்கும் பகுதிகளை தூய்மையாக வைத்துக் கொள்ள இத்திட் டம் பெரிதும் பயன் உள்ளதாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார். தொடர்ந்து மருதூர் பேரூராட்சி அலுவலகம் மூலம் அமைக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் மண்புழு உர கண்காட்சி, மண்புழு உரம் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட காய் கறி வகைகளை பார்வை யிட் டார். முன்னதாக பேரூ ராட்சித் துறை உதவி இயக்குநர் ராஜேந் திரன் வரவேற்று பேசினார். முடிவில் மருதூர் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் ரவி நன்றி கூறினார். இந்த நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக் குநர் ரமேஷ், ஊராட்சிகள் உதவி இயக்குநர் விஜயலட்சுமி, குளித்தலை கோட்டாட்சியர் சித்திரைராஜன், மருதூர் பேரூராட்சித் தலைவர் சம்பத், செயல் அலுவலர்கள் முகமது ரியாஷ் , பாலசுப்பிரமணி , கிருஷ்ணசாமி, கணேசன், பாலமுருகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## <u>தோட்டக்கலை பயிர்களுக்கு ரூ.3¼ கோடி மானியம் கலெக்டர் கருணாகரன் தகவல்</u>

நெல்லை மாவட்டத்தில் பயிரிடப்படும் தோட்டக்கலை பயிர்களுக்கு ரூ.3¼ கோடி மானியம்வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து நெல்லை மாவட்ட கலெக்டர்

கருணாகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-
தோட்டக்கலை இயக்க திட்டம்

நெல்லை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் தேவைகளை உணர்ந்தும், தோட்டக்கலை பயிர்களின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டும், நடப்பு திட்ட ஆண்டில் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் ரூ.3¼ கோடி மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பல்லாரி வெங்காயத்தின் தேவை மற்றும் அவசியத்தை அறிந்து தமிழக அரசு முதன்முறையாக நெல்லை மாவட்டத்தில் 1000 எக்டேர் பரப்பில் பல்லாரி வெங்காயம் சாகுபடி செய்வதற்காக எக்டேருக்கு மானியமாக ரூ.12 ஆயிரம் வீதம் மொத்தம் 1 கோடியே 20 லட்சத்தை முதன்முறையாக தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் மூலமாக நெல்லை மாவட்டத்தில் வெங்காயம் சாகுபடி செய்வதற்கு ஏற்ற வட்டாரங்களான கீழப்பாவூர், ஆலங்குளம், தென்காசி, கடையநல்லூர், செங்கோட்டை, வாசுதேவநல்லூர் ஆகிய வட்டாரங்களை சேர்ந்த ஏறத்தாழ 2 ஆயிரம் விவசாயிகளுக்கு மேல் பயன் அடைவார்கள். இதன் மூலம் பல்லாரி வெங்காயம் உற்பத்தி அதிகரிக்கும் நிலை உருவாகியுள்ளது.

ரூ.3¼ கோடி மானியம் இவை மட்டுமல்லாமல் 495 எக்டேர் பரப்பில் மா, எலுமிச்சை, உதிரிப்பூக்கள், மிளகாய், கொக்கோ மற்றும் வீரிய ஒட்டு காய்கறிகளை கூடுதலாக உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதற்காக ரூ.64 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் பாதுகாக்கப்பட்ட சூழலில் அதாவது பசுமைக்குடில், நிழல்வலை, மண்போர்வை அமைத்தல், பறவை தடுப்புவலை அமைத்தல் போன்ற பாதுகாக்கப்பட்ட சூழலில் தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்வதற்காக ரூ.67 லட்சமும், இயற்கை பண்ணைய சாகுபடி முறைகளான மண்புழு கூடாரங்கள் அமைத்தல் போன்றவற்றை ஊக்குவிப்பதற்காக ரூ.4லட்சமும், தோட்டக்கலை பயிர்கள் இயந்திரமாக்குதல் திட்டத்துக்கென ரூ.8½ லட்சமும், ஒருங்கிணைந்த பின் அறுவடை சாகுபடி நிர்வாக திட்டங்களான சிப்பம் கட்டுதல், நடமாடும் பதனிடும் யூனிட், குறைந்த செலவிலான வெங்காய சேமிப்பு கிட்டங்கி கட்டுதல் போன்ற கட்டுமான பணி

இனங்களுக்காக ரூ.28 லட்சமும், தோட்டக்கலை விளைபொருட்களை சில்லரை சந்தை கட்டமைப்பின் மூலம் விற்பனை செய்வதற்காக ரூ.5¼ லட்சமும் ஆக மொத்தம் ரூ.3 கோடியே 34 லட்சத்து 74 ஆயிரத்து 200 மானியம் வழங்கிட நிதி ஒதுக்கீடுசெய்துள்ளது.

வேண்டுகோள்

நெல்லை மாவட்டத்தில் கடந்த ஆண்டுகளில் வழங்கப்பட்ட நிதிஒதுக்கீடு செய்ததை காட்டிலும், நடப்பு திட்ட ஆண்டில் கூடுதலாக அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே இத்திட்டங்களின் மூலம் பயன்பெற விரும்பும் பயனாளிகள் நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில் உள்ள தோட்டக்கலை துணை இயக்குனர் அலுவலகத்திலும், மாவட்டத்தில் உள்ள அனைத்து 19 வட்டாரங்களிலும் அமைந்துள்ள தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகங்களிலும் நேரில் தொடர்பு கொண்டு பயன் அடைய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பாபநாசம் அணைக்கு 1,600 கன அடி நீர்வரத்து



விக்கிரமசிங்கபுரம், மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்துவரும் மழை காரணமாக பாபநாசம் அணைக்கு நேற்று வினாடிக்கு 1,600 கன அடி வீதம் தண்ணீர் வந்தது.

பாபநாசம் அணை

பாபநாசம் மலையில் காரையாறு வனப்பகுதியில் அமைந்துள்ள பாபநாசம் அணைக்கு, கேரளாவில் பெய்யும் தென்மேற்கு பருவ மழையின் போது நீர்வரத்து அதிகம் இருக்கும். ஆனால், இந்த ஆண்டு அணைக்கு நீர்வரத்து குறிப்பிடும்

படியாக இல்லை. இதனால் அணையின் நீர்மட்டம் உயரவே இல்லை. இருந்தாலும் முன்குறுவை பாசனத்துக்காக கடந்த மாதம் 4–ந் தேதி பாபநாசம் அணை திறக்கப்பட்டது. அப்போது, அணையின் நீர்மட்டம் வெறும் 59.75 அடியாக (மொத்த கொள்ளளவு 143 அடி) இருந்தது. கடந்த ஒரு சில நாட்களாக கேரளாவிலும், மேற்கு தொடர்ச்சி மலையிலும் நல்ல மழை பெய்ததால், பாபநாசம் அணைக்கு நீர்வரத்து உயரத் தொடங்கி இருக்கிறது. நேற்று விநாடிக்கு 1,652 கனஅடி தண்ணீர் வந்தது. அணையின் நீர்மட்டம் நேற்று முன்தினம் 65.40 அடியாக இருந்தது. நேற்று 66.60 அடியாக உயர்ந்தது. அணையில் இருந்து பாசனத்துக்கும், குடிநீருக்காகவும் 1,104 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

சேர்வலாறு–மணிமுத்தாறு அணைகள்

பாபநாசம் மலையில் உள்ள மற்றொரு அணையான சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 80.45 அடியாக உள்ளது. மற்றொரு பிரதான அணையான மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 55.09 அடியாக உள்ளது.

## <u>அமராவதிஅணையில் இருந்து 8 பழைய வாய்க்காலுக்கு தண்ணீர் திறப்பு 7 ஆயிரத்து 520 ஏக்கர் நிலம் பாசன வசதி</u>



மடத்துக்குளம், அமராவதி அணையில் இருந்து 8 பழைய வாய்க்காலுக்கு தண்ணீர் நேற்று திறந்து விடப் பட்டது. இதன் மூலம் பழைய ஆயக்கட்டு பாசனத்தில் 7 ஆயிரத்து 520 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. அமராவதி அணை

திருப்பூர் மாவட்டம், உடுமலையை அடுத்த அமராவதி அணை மூலம் திருப்பூர், கரூர் மாவட்டங்களுக்கு உட்பட்ட பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன பகுதிகளில் சுமார் 55 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. மேலும் முக்கிய குடிநீர் ஆதாரமாகவும் உள்ளது. அமராவதி அணையின் மொத்த நீர் மட்ட உயரம் 90 அடியாகும். அணையின் மொத்த கொள்ளளவு 4 ஆயிரத்து 47 மில்லியன் கனஅடியாகும். அமராவதி அணைக்கு கேரளாவில் இருந்து பாம்பாறு, சின்னாறு மற்றும் தேனாறு மூலம் தண்ணீர் வருகிறது. இந்த நிலையில் தென்மேற்கு பருவ மழை தீவிரமடைந்ததை தொடர்ந்து மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் அமராவதிஅணையின் நீர் பிடிப்பு பகுதிகளில் மழைபெய்யத் தொடங்கி உள்ளது. எனவே அமராவதி அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியது. இதனால் நீர் மட்டம் உயர தொடங்கியது. இதனை தொடர்ந்து அமராவதி அணையில் இருந்து புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு கடந்த 1–ந் தேதி முதல் பிரதான கால்வாயில் வினாடிக்கு 440 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த நிலையில்பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு உட்பட்ட பழைய வாய்க்கால் பாசன விளை நிலங்களுக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

தண்ணீர் திறப்பு

அதனை ஏற்று அமராவதி அணையில் இருந்து பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு உட்பட்ட குமரலிங்கம், கணியூர், சர்க்கார் கண்ணாடிபுத்தூர், சோழமாதேவி, கடத்தூர், காரத்தொழுவு ஆகிய 6 ராஜ வாய்க்கால்கள் மற்றும் கல்லாபுரம், ராமக்குளம் வாய்க்கால்கள் ஆகிய 8 பழைய வாய்க்கால்களுக்கு தண்ணீர் திறந்து விட தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தர விட்டார். இதற்கான நிகழ்ச்சி நேற்று காலை 11 மணி அளவில் அமராவதி அணை பகுதியில் நடை பெற்றது. இதில் திருப்பூர் மாவட்ட கலெக்டர் ஜி. கோவிந்தராஜ் கலந்து கொண்டு ஆற்று மதகு பொத்தனை அழுத்தி அணையில் இருந்து ஆற்றுக்கு தண்ணீரை திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு ஆற்றில் மலர் தூவப்பட்டது. நிகழ்ச்சியில் உடுமலை ஆர்.டி.ஓ. குணசேகரன், மடத்துக்குளம் தாசில்தார் சண்முகவடிவேல், அமராவதி பாசன சங்க தலைவர் ராஜ்குமார், பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் ஜெயப்பிரகாஷ்,

செயற்பொறியாளர்கள் தியாகராஜன் (தாராபுரம்), குழந்தை சாமி (பொள் ளாச்சி) உதவி செயற் பொறியாளர் முத்துச்சாமி, உள்பட பலர் கலந்து கொண்டனர்.

7ஆயிரத்து 520 ஏக்கர் நிலம்

8 வாய்க்கால்களுக்கும் இடைவெளி விட்டு 120 நாட்களுக்கு 250 கன அடி வீதம் 1,944 மில்லியன் கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.இதன் மூலம் உடுமலை தாலுகாவில் 1,450 ஏக்கர் விளை நிலங்களும், மடத்துக்குளம் தாலுகாவில் 6 ஆயிரத்து 70 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. நேற்றைய நிலவரப்படி அமராவதி அணையின் நீர் மட்டம் 65.58 அடியாகவும், அணையில் 2,085.22 மில்லியன் கன அடி தண்ணீர் இருந்தது, அணைக்கு வினாடிக்கு 1,214 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அமராவதி அணையில் இருந்து புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு பிரதான கால்வாயில் வினாடிக்கு 440 கன அடியும், அமராவதி ஆற்றில் வினாடிக்கு 250 கன அடியும், கல்லாபுரம், ராமக்குளம் வாய்க்கால்களில் வினாடிக்கு தலா 25 கன அடியும் என மொத்தம் அணையில் இருந்து வினாடிக்கு 740 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>இந்திய விதைச் சந்தையைக் கைப்பற்ற பன்னாட்டு நிறுவனங்கள் சதி: விவசாயிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கவலை</u>**

இந்திய விதைச் சந்தையை முழுமையாகத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பன்னாட்டு நிறுவனங்கள் சதி செய்வதாக பூவுலகின் நண்பர்கள் மற்றும் பல்வேறு விவசாய சங்கங்களின் நிர்வாகிகள் கவலை தெரிவித்துள்ளனர். இது குறித்து

டாக்டர் கு.சிவராமன், அரச்சலூர் செல்வம், மதுரை பாமயன், இந்திய உழவர் உழைப்பாளி கட்சியைச் சேர்ந்த வேட்டவலம் மணிகண்டன் உள்ளிட்டோர் சென்னையில் செய்தி யாளர்களிடம் கூறியதாவது:

`மனிதர்களுக்கும், கால்நடை களுக்கும், இயற்கைச்சூழலுக்கும் எவ்வித பாதிப்பும் இருக்காது என்பதை ஆய்வுகள் மூலம் அறிந்த பின்னரே மரபணு மாற்றுப் பயிர்களை அனுமதிப்பது குறித்து முடிவெடுக்கப்படும்' என்று கடந்த நாடாளுமன்ற தேர்தல் அறிக்கையில் பாஜக வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால் இதற்கு மாறாக தற்போது 13 மரபணு மாற்றுப் பயிர்களை வயல்வெளிகளில் பயிர் செய்து சோதனை நடத்த மத்திய அரசு அனுமதித்துள்ளது. இதுபற்றி எந்த கருத்தையும் கூறாமல் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் மவுனம் காக்கிறார்.

வாய் திறக்காமல் மவுனம்

முந்தைய ஆட்சியில் மரபணு மாற்றுப் பயிர்களுக்கு அனுமதி அளிக்க மறுத்ததால் அப்போதைய சுற்றுச்சூழல் அமைச்சர்கள் ஜெய்ராம் ரமேஷ், ஜெயந்தி நடராஜன் ஆகியோர் பாதிக்கப் பட்டது போல, தானும் பாதிக்கப் பட்டு விடக்கூடாது என்ற எச்சரிக்கையோடு பிரகாஷ் ஜவ டேகர் வாய் திறக்காமல் மவுனம் காக்கிறாரோ என்ற எண்ணத்தை இது ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் ஒருபோதும் மரபணு மாற்றுப் பயிர்களை அனுமதிக்க மாட்டோம் என ஜெயலலிதா கூறியுள்ளார் மரபணு மாற்றுப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டால் இந்தியா வில் உள்ள பாரம்பரிய விதைகள் அனைத்தும் அழிந்து போகும். அதன் பிறகு தங்களுக்கான விதை களை தாங்களே உற்பத்தி செய்யும் ஆற்றலை விவசாயிகள் இழப்பார்கள். மரபணு மாற்றுப் பயிர்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் விதைகள் முளைப் பதில்லை. நமது சாகுபடிக்கான விதை களுக்காக பன்னாட்டு நிறுவனங் களை மட்டுமே சார்ந்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். இதன் மூலம் இந்திய விதைச் சந்தை யையும், காலப்போக்கில் இந்தி யாவின் ஒட்டுமொத்த விவசாயத் துறையையும் தங்கள் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்ற சதித் திட்டத்துடன் பன்னாட்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. மரபணு மாற்றுப் பயிர்களால் உணவு உற்பத்தியை பெருக்க முடியாது. பூச்சித் தாக்குதலை முழுமையாக கட்டுப்படுத்த முடியாது. இந்நிலையில் எவ்வித அவசியமும் இன்றி, பன்னாட்டு நிறுவனங்ளின் நலன்களுக்காக மட்டும் இந்தி யாவில் மரபணு மாற்று பயிர்களை பரவலாக்குவதற்கான முயற்சிகள் நடக்கின்றன. இதனை அனுமதிக்கக் கூடாது. இவ்வாறு அவர்கள் கூறினர்.